# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.


REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு மார்கழி மாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 50-ம் இலக்கம்


# கிறிஸ்மஸ் விழா ஞாபக இதழ்

## வாருங்கள்! பாலக யேசுவை ஆராதிப்போம்



பெத்லகேமிலே ஒரு மாட்டுத் தொழுவத்தில் தேவசுதன் பிறந்தார். தேவன் மனுக்குலத்துக்குக் கொடுத்த ஒப்புயர்வில்லாத நன்கொடை பாலகயேசு. இதிலும்பார்க்க ஒருபெரிய கொடையைத் தேவன் மனிதருக்குக் கொடுத்திருக்க முடியாது. பாலக யேசுவிலும்பார்க்க யோக்கியமான கொடை வேறெதுவும் தேவனிடமில்லையென்றால் அது மிகையாகாது. தேவசுதன் மனிதனாக அவதாரஞ் செய்திராவிட்டால் அவர்மனுக்குலத்தைத் தம் வசப்படுத்தியிருக்க முடியாது.

தேவதாயாரிலும்பார்க்கக் கனிந்த உள்ளத்துடன் குழந்தையேசுவைவரவேற்கத் தகுதியுள்ளவர்கள் மனுமக்களுள் வேறெவருமில்லை. முதல்நத்தால்இரவன்று தேவதாயாரின் உள்ளத்தில் இருந்த குதூகலத்தை அளவிட எவரால்முடியும்? குழந்தை யேசுவைக் கன்னிமரியாய் பிள்ளைக் கெலியுடன் நேசித்தார். அவர் தமது குழந்தையைத் தேவசுதன் என்று ஆராதித்து வணங்கினார். பாலகனும், மரியாயைத் தாயில்வைக்கவேண்டிய பாசத்துடன் அன்புகனிய நேசித்தார். மாதா பாலகனை அன்புடன் வாரியெடுத்து மார்புடன் அணைத்து ஆனந்தமுத்தங்களை மாரியாகச்சொரிந்து பரவசமடைந்தார். அன்புகனிந்த உள்ளத்துடன் மாதா தன்மகனை வாயாரவாழ்த்தித் துதித்தார். சம்மனசுகள்பாடிய மங்களவாழ்த்துகள் எல்லாம் தாய்மரியின்வாழ்த்துகளுடன் ஒப்பிடப்படின் அவைஎம்மாத்திரம்! தேவதாயார் பாலகயேசுவை வாழ்த்தியவாழ்த்துகளின்தொனி பரலோக இராச்சியம் முழுவதும் எதிரொலியாக ஒலித்துக்கொண்டிருந்திருக்கும். இவ்வுலகமும் அதிலுள்ள சீவராசிகள்அனைத்தும், அத்துடன் மனுமக்கள் எல்லாரும் ஒருமித்துத் தேவசுதனுக்கு அளிக்கக்கூடிய வரவேற்பிலும் மாதா அளிக்கும் வரவேற்பு மகா உந்நதமானது.

குழந்தைவடிவந் தாங்காது வேறெந்தத்தோற்றத்திலும் தேவன் மனுச்சந்ததியை வசீகரித்திருக்க முடியாது. குழந்தையேசு எங்கள் அன்பையும், நம்பிக்கையையும் ஒருங்கே கொள்ளைகொள்ளுகிறார். சின்னஞ்சிறு பாலகன் விரித்தசிறுகரங்களுடன் எங்களிடம் கேட்பவற்றை மறுக்க எங்கள்மனம் இசையுமா? அன்புசொட்டும் சின்னஞ்சிறுஉருவும்; அருள்சுரக்கும் புன்னகையும் எங்களுக்கு அவர்பால் நம்பிக்கையை உண்டுபண்ணுமல் போகுமா? தேவன் தமதுஅன்புள்ளத்தை மிருதுவான சின்னஞ்சிறுஉடம்பில் மறைத்து வைத்திருக்கிறார். எங்கள் ஒவ்வொருவருக்கும் முடிவில்லாதமோட்சஇன்பத்தைக் கொடுக்க வேண்டுமென்று அவரதுஇதயம் துடித்துக் கொண்டிருக்கிறது. தேவன்அனுப்பிய எங்கள்இரட்சகர் இதோபிறந்திருக்கிறார். வாருங்கள்! வாருங்கள்!! பாலகயேசுவை ஆராதிப்போம்.

— M. A.

## குருமாரின் தாய்மாரைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக!

மம்மா மாகிறிற்ரு என்றால்யார்? அவதான் அர்ச். ஜோண் பொஸ்கோவின் அருமைத்தாய். அவவுடைய வாழ்க்கைவரலாற்றில் ஒருகட்டத்தை மாத்திரம் — அதாவது அவ தனது மகன் குருப்பட்டம் பெற்ற சுபதினத்தில் அவருக்குக் கூறிய பொன்மொழிகளை மாத்திரம் இங்கே தருகின்றோம்.

அன்று மாலைச்செபம் முடிந்ததும் தொன்பொஸ்கோவின் அபிஷேகஞ் செய்யப்பெற்ற திருக்கரங்களைத் தன்னுடைய கைகளில்தாங்கியவண்ணம் அழுத்தமான குரலில்—அதிலும்கனிவு நிறைந்த குரலில் மாகிறிற்ருஅம்மா கூறுவா: "மகனே ஜோண்! நீர் இப்பொழுது ஓர்குருவானவர். இன்றுதொடக்கம் திவ்வியபூசைப்பலியை நீர் ஒப்புக்கொடுப்பீர். அதனால், யேசுவுடன் நெருங்கிப்புழங்குவீர். ஆயினும், மகனே! பூசைப்பலி ஒப்புக்கொடுக்கத் தொடங்குகிறதென்றால் பாடுபடவும் தொடங்குகிறதாகும். அதை இப்பொழுது நீர்உணரமாட்டீர். ஆயினும், படிப்படியாக உம்முடையஅம்மா சொன்னது சரியென்று ஒருகாலம் நீர் உணருவீர். நான் சீவனோடு இருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி, நீர் எனக்காக மன்றாடி வருவீரென்பது எனது திடநம்பிக்கை. இஃதொன்றையே நான் கேட்கிறேன். எதிர்காலத்தில் ஆத்துமாக்களை ஈடேற்றுவது பற்றியன்றி வேறெதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். என்னைப்பற்றிய கவலையுமே வேண்டாம்."

இப்பொழுது நாம் வணங்கிச் சங்கித்துவரும் ஜோண் பொஸ்கோவைப் பெரிய அர்ச்சியசிட்டவராக ஆக்கியவ இந்தத் தாய்தான். ஆனால், இவ எழுதவாசிக்க அறியாதவ. தங்கள் அருமைப் புதல்வர்கள் குருபதவியை அடையத்தக்கதாக அவர்களைத் தக்கவாறு பயிற்றி வளர்ப்பதில் அதிகபங்குடையவர்கள் தாய்மாரே. எல்லாத்தாய்மாரும் இந்தப் பரிசுத்த குருவானவரின் தாயைப்போல் இருந்தாலோ! ஆண்மக்களைப்பெற்ற ஒவ்வொருதாயும் இன்னொரு கிறீஸ்துவை உருவாக்கும் ஆற்றல் உடையவள். தனதுமகன் ஒருகுருவாய் இருக்கிறார்எனக் கூறுவது ஓர்தாய்க்கு எத்துணை மகிழ்ச்சியைக் கொடுக்கும்!

குருமாரின் தாய்மாரைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக!

திருக்குழந்தையேசுவின் சமாதானமும், சந்தோஷமும், எமது பரலோக அன்னையின் பாதுகாவலும், திருக்குடும்பத்தின் தலைவரான அர்ச். சூசையப்பரின் அடைக்கலமும் கிறிஸ்மஸிலும், புத்தாண்டிலும் உங்களுடன் இருப்பதாக.

### நமது அச்சகம்

நமதுஅச்சகத்தின் வழமையான புத்தாண்டுவிடுமுறை இம்மாதம் 28-ந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும். மறுபடி வருகிறதைமாதம் 6-ந் திகதி வேலைதொடங்கும்.

### நம் பத்திரிகை

விடுமுறைகாரணமாக நம்பத்திரிகை வருகிறதைமாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை வெளிவரமாட்டாது. அடுத்த 9-ந் திகதி வியாழக்கிழமையே வெளிவரும்.

### 1958-ம் ஆண்டுக்கான கத்தோலிக்க பஞ்சாங்கம்


வருடத்தின் ஒவ்வோர் நாளிலும் பாவிக்கப்படும் பூசை உடுப்புகளின் நிறங்களும், 1-ம், 2-ம் வகுப்புத் திருநாட்களும், யேசுவின் திருஇருதயப் பூசை, மரியாயின் மாசற்றஇருதயப் பூசை, மரித்தோர் பூசைகளைத் தெரியும் நாட்களும், விசுவாசப் பிரமாணம் சொல்லப்படும் நாட்களும், ஒருசந்திநாட்களும், கடன்திருநாட்களும், பிரதான யாத்திரைத்தலங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

பிரதி விலை சதம் 30.

தபாற்செலவு சதம் 4.

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்.


**சர்வேசுரன் உலகத்தை எவ்வளவாக நேசித்தாரென்றால், தம்முடைய ஏக சுதனைத் தந்தார் — அரு. 3, 16.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவச்சோதனை என்றால் என்ன?

( சி. எஸ். நாயகம் — பத்தாவத்தை, இளவாலை )

(சென்றவாரத் தொடர்ச்சி)

இனி மறு "சோதனை" எத்தன்மையானதென்று ஆராய்வோம். இதுநமது ஆத்துமத்துடன் சம்பந்தப்பட்ட சோதனையாகும். விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம், தேவபயம், பிறர்சிநேக முதலாம் புண்ணியங்களுக்கும, விசேஷமாய்க் 'கற்பு'என்னும் புண்ணியத்துககும் விரோதமாய் உண்டாகின்ற "பாவச்சோதனை"யாகும். உண்மையிலே இந்தச்சோதனைதான் மிகவும் கஷ்டசாத்தியமானது தேவவரப்பிரசாதத்தின் உதவியின்றி இந்தச்சோதனையிலே நாம் வெற்றிகாண்பது பகற்கனவே. தேவஉதவியும், பக்கபலமுமின்றேல் நாம் இதில் தோல்விகாண்பது திண்ணம். ஏனெனில், நமது சொந்தப் பலத்தைக்கொண்டு இந்தச் சோதனையை மேற்கொள்ளமுடியாது. இந்தச்சோதனைக்கு மூன்றுபடிகள் உண்டு. (1) வெறும்பாவநினைவு அல்லது மாயாதோற்றம். (2) இந்தநினைவு அல்லது தோற்றத்தில்கொள்ளும் பிரியம். (3) பாவத்துக்குப் பூரணமனச் சம்மதம்.

1-ம்படி: பாவஎண்ணம் அல்லது மாயாதோற்றம். ஆசாபாசமும், ஆசையும் ஒன்றுதான். முன்கூறியதுபோல் காற்று எப்பொழுதும் வீசியவண்ணமிருக்கும். அதுபோல ஆசாபாசக் காற்றும் எப்போதும் நமதுஉளத்தில் வீசியவண்ணமிருக்கும். இதைத் தவிர்க்கமுடியாது. மறுபக்கம் ஆசாபாசம் தன்னிலேபாவமல்ல. ஆகவே, இயற்கையாக ஓர் பாவநினைவு தலைகாட்டும்போது, அதை நாம் பொருட்படுத்தாதிருக்கும்வரை அந்தநினைவால் நமக்கு எவ்விததீங்குமில்லை. ஆனால், அதை உடனுக்குடன் தள்ளிவிடுவதே விவேகம். எந்தப்பாவநினைவும் விஷச் செந்துக்குச் சமானம். ஒருவிஷச் செந்து முகட்டிலிருந்து நமதுமடிமேல் விழுந்துவிட்டால் உடனேதிகைத்துப் பதைத்து அதைஉதறித்தள்ளி விடுகிறோம். ஏன்? ஏனெனில், அதைவிட்டால் நமதுசரீரத்தைத் தீண்டும். தீண்டினால் விஷம்ஏறிக்கொள்ளும். இதையும் கவலையீனமாய்விட்டால் மரணம்மன்றி வேறென்ன? இதற்கும், ஓர் பாவநினைவுக்கும் வித்தியாசம்கிடையாது. ஏனெனில், இதைப்போலவே ஓர்பாவநினைவும் நமது ஆத்துமத்துக்கு ஓர்விஷச்செந்து. அது நமதுஆத்துமத்தின் மடியில்விழுந்ததும் நாம்அதை உடனேதானே உதறித்தள்ளவேண்டும். அன்றேல்அது நம்ஆத்துமத்தைத் தீண்டும். இதையும் நாம் பறுவாய் பண்ணுதுவிட்டால் ஆத்துமத்துக்கும் மரணந்தான். அதாவது ஈற்றில் சாவானபாவத்தில்விழுத்தி நரகத்தில் தள்ளும். ஆகவே, பாவநினைவு தன்னளவில் பாவமற்றதாய் இருந்தாலும் நாம் அதைஉடனே தள்ளிவிடவேண்டும்.

2-ம்படி பாவநினைவிலேபிரியமான— இன்பமானயோசனை. பிரியம் என்பதும், விருப்பம்என்பதும் ஒன்றுதான். ஓர்பாவநினைவு நம்மில் உண்டாகும்போது இயற்கையிலே நாம் ஓர்விதசந்தோஷத்தை உணருகிறோம். ஆனால், விளையாட்டாகத் தொடங்கும்நோய் வினையமாய் முடிவதும்உண்டு. பாவநினைவு ஆத்துமத்தின்நோய். இது விளையாட்டாகத்தொடங்கி வினையமாயும்முடிக்கும் சக்திவாய்ந்தது. ஆகவே, பாவநினைவு தலைகாட்டும்போது அதை நாம் ஆரம்பத்திலேயே தவிர்த்துவிடவேண்டும். அன்றேல் கவலையீனம் ஓர்சமையம் கவலைக்கிடமாய் முடியலாம்.

3-ம்படி பாவநினைவிலே பூரணமனச் சம்மதம். கனமான ஒருகாரியத்திலே எந்த ஒருபாவநினைவும் நமது பூரணமனச்சம்மதத்தைப் பெற்றதும அதை நாம் செய்தாலும்சரி, செய்யாவிட்டாலும்சரி, சாவானபாவமாகின்றது. பாவத்தின்கனகனத்தை நம்லவ்வொருவரதும் மனச்சாட்சியேசொல்லும் அது எவ்விதம்தீர்க்குமோ அதுவேசரி. "தன்தன்மனச்சாட்சிக்கு ஒவ்வாத எதுவும் பாவம்" என்பது வேதவாக்கியம். தன்மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டஒருவன்—பயந்தஒருவன் இலகுவில் பாவஞ்செய்யமாட்டான். ஏனெனில், அதுவே அவனுக்கு நீதிபரனுயிருந்து அவனைநடுத்தீர்க்கும். அதனால் பாவசங்கீர்த்தன ஆயத்தகாரர் எப்பொழும் முன்னதாகவே ஆத்தும சோதனை செய்யவேண்டியதுஅவசியம். ஆத்துமசோதனைஎன்பது ஒருவன் தன்மனச்சாட்சியை ஆராய்வதாகும். அது எவ்விதம்சொல்லுகிறதோ அதன்படிசெய்கிறவர்கள் நல்லபாவசங்கீர்த்தனம் செய்கிறவர்கள். இவர்கள் தங்கள்இருதயத்திலே சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டு திரும்புகிறவர்கள். தங்கள்மனச்சாட்சிக்கு விரோதமாகப் பாவசங்கீர்த்தனம்செய்கிறவர்கள் கள்ளப்பாவசங்கீர்த்தனம் செய்கிறவர்கள். இவர்கள் குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசியவாறு, இரட்டைப்பாவம்கட்டி, சந்தோஷத்துக்கும், சமாதானத்துக்கும் பதில் மனச்சாட்சிக் கண்டனத்தையும், மனக்குத்தலையும், மனக்குழப்பத்தையும் கொண்டுதிரும்புகிறவர்கள்.

நிற்க, சரீரத்தோடு சம்பந்தப்பட்டதும், ஆத்துமத்தோடு சம்பந்தப்பட்டதுமான இருவகைச்சோதனைகளும் நமதுஆன்மஇரட்சணியத்தின் நன்மைக்காகவே தேவதிருவுளத்தால் ஏற்படுத்தப்பட்டன. நாம் எவ்வளவுக்குச் சாங்கோபாங்கத்தில் — புண்ணியத்தில் ஓங்கிவளர்கிறோமோ அவ்வளவுக்குச் சோதனைகளும ஓங்கிவளர்ந்துகொண்டேவரும். காற்று எப்பொழுதும் ஓரேசீராய் இருப்பதில்லை. சிலவேளை ஓர்இலைதன்னும் அசையாது. சிலவேளை உரமாகவீசும். சிலவேளை சண்டமாருதமாகவீசும். அவ்வாறே பாவச்சோதனையும், சிலவேளை தூக்கத்திலிருக்கும். சிலவேளை சுமாராய் வீசும். சிலவேளைஉரமாய்வீசும். சிலவேளை சண்டமாருதமாய்வீசும். தேவகரம் நம்மைத்தாங்காவிடில் நாம் சோதனைப்புயலில் சருகுகள்போல் பறப்பதுதிண்ணம். ஆகவே, நாம் எப்பொழுதும் தேவஉதவியை இரந்து கொள்ளவேண்டியது அவசியம்.

"பாவச்சோதனை எவனுக்கு இல்லையோ அவன்முற்றாகச் சர்வேசுரனால் மறக்கப்பட்டவன்" என்கிறார் அர்ச். அகுஸ்தீனர். ஆகவே, பாவச்சோதனை சர்வேசுரன் நம்மேல்கொண்டுள்ள கரிசனையின் அறிகுறியென்று சொல்லவேணடும் அதனால் நமக்குவரும் பாவச்சோதனைகளாலே அவருக்கு மனநோவு உண்டாக்காமல், அவரின் அன்பையும் அருளையும் பெறுவதற்கு அவைகளைச் சிறந்தசாதனங்களாக நாம் பாவிக்கவேண்டும். எத்தனையோபேர் தங்கள்சரீரசம்பந்தமான சோதனையாகிய கஸ்தி, துன்பம், வியாதி, வறுமைமுதலிய இவைகளைச் சகிக்கவாற்றாது தேவனை மனநோகிறார்கள். அவரைத்திட்டிக்கொட்டுகிறார்கள். இது முன்கூறியதுபோல் தேவநிந்தை. இவர்கள் இம்மைக்கும்மறுமைக்கும் ஓர்போதும் நன்மையைக் கண்டடையமாட்டார்கள். யோபுமாகாத்துமாவைப்போல் அவைகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், அவர் பிறகு கண்டடைந்த இகலோகபரலோக நன்மைகளை அபரிமிதமாகப் பெற்றுப் பாக்கியசாலிகளாக வாழ்வார்கள். பாவச்சோதனை நாம மோட்சம்ஏறவோ, அல்லது நரகில்இறங்கவோ உதவும் ஓர்ஞானஏணி என்னலாம். பரலோகத்தை நாடுகிறவர்களுக்கு இது பிதாப்பிதாவாகிய யாக்கோபு கனவில்கண்ட ஏணி. நரகத்தை நாடுகிறவர்களுக்கு இது யூதாஸ் அவலமாய் நான்றுகொண்ட "கயிறு." ஆகவே, நாம் இதனை யாக்கோப்பின் ஏணியாகப் பாவித்து, மோட்சவாசலை அடையஇயன்றமட்டும் தேவஉதவியைக் கொண்டு வருந்துவோமாக! சுபம்.

# திருக்குழந்தை யேசுவுக்கு ஓர் தெட்சணை

— சூ. அ. —

ஞான மெனும்பயி ரோங்கிடவும்
நச்சுப் பவத்துயர் நீங்கிடவும்
கானம் உயர்வானம் தேங்கிடவும்
கர்த்தனர் வந்து பிறந்தாரே!
— ஞானி

ஆதியந்தமில்லாத பராபரன், அகிலாண்ட கோடிகட்கெல்லாம் அதிபன், மானிடச்சட்டை சாத்தி அவனியின்கண் அவதரித்துப்பிறந்த அன்பே தேங்கிப்பாயும் அருந்தினம் இதோ வருகின்றது!

**பாலயேசு எவைகளைத் துறந்துவந்தார்?**

தமது பரமபிதாவின் அரவணைப்பையும், பரகதியின் சகலபாக்கிய சலாக்கியங்களையும், மகிமைப் பிரதாபங்களையும் புறத்தேஒதுக்கிவிட்டு, அருள்நிறைபரனார் அட்டதரித்திரராய், வறுமையின்சின்னமாக நீசராகியஎம்மிடையே அவதரித்துவந்தார்.

தித்திக்கும் தீஞ்சுவையில் கீதம்பாடித்
தேவுலகில் தம்பிதம்பி எனவேவானோர்
துத்தியங்கள் கூறிநிற்கத் தூங்கலாமே
தூயனே அதனைவிட் டிங்கேவந்து
எத்திக்கும் இடமின்றிக் கந்தைசுற்றி
இரவினிலே பனிவாடை இவைகள்தாக்க
முத்திக்கு வழிகாட்டப் பிறந்தாயோசொல்
மோனதுயில் நீத்தெங்கள்
முகம்பாரையா.
— அமுது

**எதற்காக அவர் மானிடனாக வந்தார்?**

பிசாசின் அடிமைத்தனத்தினின்று நிசிதராகிய எங்களைமீட்க, எங்கட்கு முத்திவழிகாட்ட, எம்மைப் பரகதியில் சேர்க்கவே மானிடனாகவந்தார்.

**தமக்கென யாதைக் கொண்டு வந்தார்?**

முதலாவது, பணிதல். தம்மாற் சிருட்டிக்கப் பட்டவர்களுக்குப் பணிந்து நடந்தார். இரண்டாவது, புரிதல். வெயர்க்கக்களைக்கத் தொழில் புரிந்து, தம்மைவளர்த்த கைத்தாதையுடன் சீவனத்துக்குரியவைகளைத் தேடினார். மூன்றாவது, வறுமை, செபம், தபம், மௌனம், முப்பது ஆண்டுகளாக மறைந்தசீவியம். ஆம், பலவேளைகளில் வறுமையென்ற வறுமைஅல்ல. நரிகட்குப் பக்குவமான குகைகளும், பட்சிகள் உறங்கச் சொகுசான கூடுகளுமுண்டு; மனிதகுமாரனுக்கோ தலைசாய்க்கத்தானும் இடமேஇல்லையென அவரே வாய்விட்டுச்சொன்னார்.

**மன்பதையை மீட்க வந்தவருக்கு மனிதன் என்ன கைம்மாறுதான் செய்தான்?**

நிகரில்லாத அவரின் அன்புக்கு, நிரையமே உருவான பகையைக் கொடுத்தான். சொல்லொணாவாதை வேதனை, நிந்தனைகளை அவருக்குச் செய்தான். வேண்டாம் வேண்டாமெனத் துவேஷித்து வெறுத்து அவரைக் கொடுஞ்சிலுவையில் அறைந்து தேவகொலை புரிந்தான்.

அங்ஙனமாகவும் அவர் எங்கட்குத் தந்துபோனது என்ன?

இதை விபரிக்கப்புகின், உலகமே அந்தநூல்களை அடக்க இயலாதே. சுருங்கக்கூறில், அவர் எங்கட்குத் தந்துபோகாததுதான் என்ன? தமது மட்டில்லா அன்பையும், அருளையும், திருச்சரீரத்தையும், உதிரத்தையும் எங்கட்குத்தந்தார். தம்மை முழுமையுமே எங்கட்காகச் சிலுவையில் பலியாக்கினார். எங்கள் நெடுஞ்சிறையை நீக்கினார். நமது மீட்பராகிய அவர் எங்கட்கு மோட்சகபாடங்களைத் திறந்துவைத்தார். எங்களை வழிநடத்தத் தமது திவ்வியபோதகங்களையும், திருச்சபையையும் தந்துபோனார். ஈற்றிலே மனிதனுக்குத் தம்மைத்தாமே முற்றாக அளித்துவிட்ட பெருங்கருணைத் தடங்கடலானவர் சிலுவைமரத்திலே தமதுஉயிரைப் பலியாக்குமுன் பின்வருமாறு யோசித்தார்போலும். நம்மைமுற்றாக மனிதனுக்குக் கொடுத்தோம். இன்னும் ஒரேயொரு திரவியம்தான் நமக்குஉண்டு. அதுதான் நமதுநேசமாதா. அவவையும் மனிதனுக்கு ஈந்துமரிப்பேன்... "இதோ! உமதுமகன். இதோ! உனதுமாதா." என்னே எங்கள்நாதரின் கருணை!

ஒரு பெரியாரோ, தபோதனரோ, குருவோ, மகாத்மாவோ நம்இல்லத்திக்கு வரும்போது நாம் அவருக்கு யாதும் தெட்சணைவைத்து வணங்க ஒருபோதுமே தவறமாட்டோம். ஆகவே, அரியசகோதரமே! இந்த நத்தால் சுபதினத்திலே திவ்விய குழந்தையேசு உனது குடிசையின் கதவில்வந்து தட்டும்பொழுது நீ அவருக்கு வைக்கப்போகிற தெட்சணை என்ன? சற்றே சிந்திப்பாய்.

ஆம்! இங்கே இடம்இல்லையென்று சொல்லவேமாட்டாய். இதுநிச்சயம். உன்னைமுழுமையும் அவருக்குக் கொடுப்பாய். நல்லது! ஆனால், இதுவும்போதாது. நீ அவருக்குக் கொடுக்கக்கூடிய மிகவும்மேலான காணிக்கை ஒன்றுஉண்டு. அது பொன், தூபம், வெள்ளைப்போளம் அல்ல. அவைகள் நல்லவைதான். ஆனால், அவைகளிலும் மேலானஒன்றை நீ அவருக்குக் கொடுக்குமாறு உன்னைஏவும்படி நான் தூண்டப்படுகின்றேன். அது யாது? இதோ சொல்கிறேன்.

தமது நிலைதப்பித் தவித்துத்தவித்துத் தம்முடைய பரமபிதாவின் வீட்டையும், அரவணைப்பையும் துறந்து, ஒட்டமும்பாய்ச்சலுமாய் எங்களைத் தேடிவந்த "ஊதாரிப்பிள்ளை"க்கு — தேவபாலக பரதேசிக்கு — "தாகமாய் இருக்கிறேன்" என்று சொல்லி விம்மிஇரக்கும் திருக் குழந்தைக்கு நீ ஒரு ஆத்துமத்தைக் காணிக்கையாகக் கொடு.

**காணிக்கையாகக் கொடு**

இது எவ்விதமெனில், பரமபிதாவையும், அவர்அனுப்பிய திருமீட்பரையும், அவர்தந்த சத்தியமறையையும் மறுதலித்துத் திருச்சபையின் போதகங்களை இகழ்ந்து, தனதுஅன்பான பிதாவின் வீட்டைவிட்டுப் பாவ அந்தகாரத்தில் இருந்து பிசாசின்பன்றிகளை மேய்த்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

**EDUCATIONAL**

Pitman-qualified Stenographer will take in Girl—students for tuition in Shorthand and Type-writing. If desired, they will be prepared for the London Chamber of Commerce, G.C.E. Ord. Level and other examinations.

Apply in person to :—

**(Miss) M. M. Thurairingham,**
20, Third Cross Street,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுவமுங் கழுமரமும்

உலகசரித்திரத்தில் உன்னதஸ்தானம் வகித்துள்ளநத்தால்சுபதினம் வருகின்றது. இந்த மங்கலவிழாவின்போது சிலுவையைப்பற்றி நாம சிந்திப்பதில்லை. அப்படிச்சிந்திப்பது ஓர்மண்டை ஓட்டை விருந்தின்நடுவில் வைத்தது போன்றிருக்கும். திருச்சபை தனது விசித்திரமான வழிபாட்டுச்சக்கரத்தில் ஒவ்வொன்றிற்கும் உரியஇடம் கொடுத்திருக்கிறது. எனவே, இக்காலத்தில் நாம் வெல்லேமலேக்குகையில் எமது கருத்துக்களை ஊன்றுகிறோம். பெத்லகேம் தொழுவத்திற்பிறந்து, ஆனந்த வெள்ளத்தை மக்களுக்களித்த இம்மனுவேலைத் தியானிக்கும்பொழுது, வானத்தில் சோதிஒளிர, வானதூதர் துதிபாடிநிற்க, உலகில் எழுந்தருளியவர் முப்பத்துமூன்று ஆண்டுகளின்பின் சிலுவையில் உயிர்விட வந்தவர்என்பதை நாம்மறக்கலாகாது குழந்தையின் கரங்கள் சிலுவைபோல் நீட்டியிருந்தன என்று நாம் கற்பனைசெய்யாவிடினும் பின்பு ஒருகாலம் இரட்சணியஎத்தனமான சிலுவையில்அறைபடவே அவைகளுடன் அவதாரஞ்செய்தார் என்பது உண்மை.

ஒளிபெருகிய அன்றிரவு, உலகத்துக்கு ஒளியானவர் உதித்த இம்மார்கழி இரவு. இன்பம்பெருகுந்தினம் நத்தால். இவ்வின்பம் மடைதிறந்துபாய்கின்றது. ஆகையாற்றான் நாம் எமது உறவினர், சிநேகிதருக்கு மகிழ்ச்சிமிகுந்த வாழ்த்துக்கூறுகிறோம். இன்று ஒருதினத்தைமாத்திரம் மகிழ்ச்சியாய்க் கழிப்போம்என உலகமாந்தர் கட்டுப்பாடுசெய்தாற்போல் நாம் கருத்தின்றிக் களிப்புக்கொள்ளுதல் நியாயமின்று. ஏதோ ஒருபிறந்த பெருநாள் எனப் பேரானந்தங்கொள்ளுதலுஞ் சரி அன்று. உலகஇரட்சகர் பிறந்ததினம் என நாம்மகிழ்ச்சி கொள்வதே நியாயமாகும்.

தேவன் மானிடகோலங்கொண்டு, இப்பூவுலகிற் சிலகாலந்தங்கி, பின்னர் போயிருந்தால் அவர்வருகை எமக்கு மகிழ்ச்சியை அளித்திராது. பின்புறத்தில் கல்வாரிகாணப்படுவதே—அதாவது மனிதஈடேற்றத்துக்காகவே திருப்பாலன் எழுந்தருளினார் என்பதுவே அவர்பிறப்பில் நாம் அக மகிழக்காரணம்.

கிறீஸ்துவின்பிறப்பு மக்களின்ஈடேற்ற உறுதிஎன்பதே எமது அத்தியந்த ஆனந்தத்திற்குக் காரணமென நத்தால் வழிபாட்டு ரீதிவற்புறுத்துகிறது. நத்தால் விழிப்புத்தினத்தில், "கர்த்தர் வந்துகாப்பார்என இன்று அறிவீர்நீரே" (சங். 72) என அடிக்கடி கூறுகின்றது. கிறிஸ்மஸ்தின முதல்மாலைக் கணிதச் செபத்தில் "தலைநிமிர்ந்து பாருங்கள், ஈடேற்றம் இதோ அண்மையில்" எனப் பாடச்செய்கிறது திருச்சபை. அதே மாலைஆராதனைச் சங்கீதத்தில் "உலக இரட்சகர் யேசுநாதர்! மக்கள்அழியா நம்பிக்கையாளர்!" என நவமாய் உதித்த தனதுஅரசனைத் திருச்சபை துதிக்கிறது. "இரட்சாநாதனை மண்ணிற்கொணர்ந்து மக்கள் துன்பந் துடைத்தநன்னாளே" எனப்பாடுகிறது. நடுச்சாமப்பூசையின் நிருபமும் "நமது இரட்சகராகிய சர்வேசுரனுடையவரப்பிரசாதம் சகலமனிதருக்கும் வெளிப்பட்டு......நமது நம்பிக்கைக்கு விடயமாகிய ஆனந்தபாக்கியத்துக்கும், உந்நதகடவுளும், நமதுஇரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்துவின் மகிமைப்பிரதாப ஆகமனத்துக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவும் நமக்குப்படிப்பிக்கின்றது. இவரே நம்மைச் சகல அக்கிரமங்களிலும்நின்று இரட்சித்து" என வற்புறுத்துகிறது குறிப்பிடற்பாலது. அதேகருத்து விடியற்காலப்பூசையின் அனுபவிப்புப்பாக்கியத்திலும் காட்டப் பெறுகிறது.

"சீயோன் குமாரத்தீ! மகா மகிழ்ச்சி கொள்;
ஜெருசலேம் மகளே! ஆனந்தக்கூச்சலிடு;
இதோ உன்நாயகர் வருகிறார்;
நீதிமான்; உலகமீட்பர்." (சக்.)

செகமீட்பர் இவ்வுலகத்தில் எழுந்தருளுமுன்னும் பின்னும நடந்தசம்பவங்கள் கிறீஸ்துநாதர் அடிமைமானிடவர்க்கத்தை மீட்கவந்தாரென்பதைக் காட்டுகின்றன. அம்மீட்பும், அவர் சிலுவையில் தொங்கும்பொழுதே நிறைவுபெறும். சூசைமாமுனிவரின் சந்தேகந்தீர்க்கவந்த வானதூதன், அவரதுகன்னிமைஅழியாப்பிறப்பைக்கூறி, மரியம்மாள்பெறும் மகவுக்கு "யேசு"—அதாவது இரட்சகர் எனப்பெயரிடும்படி கற்பிததார். ஏனெனில், "அவர் தமதுமக்களை அவர்களுடைய பாவத்திலிருந்து இரட்சிப்பார்." வானதில் ஒளிவீசக்கண்டு அஞ்சிநடுக்குற்ற இடையரைவிளித்து, "இன்று தாவீதன் பட்டணத்தில் உங்களுக்கு ஓர்இரட்சகர், அதாவது கர்த்தரின் கிறீஸ்து பிறந்திருக்கிறார்" என அறிவித்தார் தேவதூதன். ஆயர்கள் அமலன்உதித்த செய்திபெற்றது மாத்திரமன்று, அவர் கிறீஸ்துஎன அழைக்கப்படுவதையும் முதலில்கேட்கும் பாக்கியம்பெற்றார்கள். கிறீஸ்துஎன்பது அபிஷேகம்பெற்றவர்என்று கருத்துப்பெறும். குருவாக—ஏக பெரியகுருவாக அபிஷேகம் பெற்றார். பலிசெலுத்தவே குரு. ஆகவே, பிறந்த அன்றிரவே அவருடையமரணத்தை அருந்தாபத்தியாகக் குறிக்கிறார் தேவதூதர்.

பரிவாரங்களுடன்வந்த கீழ்த்தேச மன்னர்களின் சிறந்தகாணிக்கைகளுள் ஒன்றான வெள்ளைப்போளம் மரணத்தைக் குறிக்கிறதன்றோ! வாரங்கள் சில சென்றன. திருக்குழந்தை வேதமுறைப்படி கோயிலில் காணிக்கையாக்கி மீட்கப்பட்டார். கிழத்தீர்க்கதரிசி சிமியோன், கடவுள் தமக்களித்த வாக்குநிறைவு பெற்றதுகண்டு களிப்பெய்தினார். திருக்குழந்தையின் எதிர்கால வாழ்வைப்பற்றித் தீர்க்கதரிசனமாய்க் கூறினார். அவர் பாடுபடுவார், அவருடைய அன்னையுங் கூடப்பாடுபடுவார் எனக் கூறினார். எனவே, யேசுநாதர் எமது இரட்சாபெருமான்; மனித ஈடேற்ற வேலைக்காகவே மண்ணில் அவதரித்தார்எனும் சிந்தனை அவருடைய பிறப்புடன் சார்ந்ததுஎன்பது நிச்சயம்.

மக்கள் சகலரையும் ஈடேற்றவந்தார் கிறீஸ்துநாதர். அதைக் குறிப்பது கிறிஸ்மஸ்விழா. இவ்விழா மகிழ்ச்சியினிடையே அவருடைய பிறப்புத்தினத்தை விடுமுறைநாளாக அனுசரிக்கிறவர்களிற்பலர் அவரைநினையாமற் போவார்களே என்றஎண்ணம் எம்மனதை வருத்துகிறது. சபைகள்கூடும் ஜெபகூடம் சிலுவைக்கு இடங்கொடாததும், ஈடேற்றஅலுவலில் எமதுஆண்டவனுக்கும் பங்குஉண்டுஎன அங்கீகரியாததுமான பாரம்பரை நம்அனுதாபத்திற்கு இலக்காகிறது. இத்தகையவர் தொழுவத்தையும், சிலுவையையும்பற்றி அடிதலைமாறிச் சிந்திப்பது அபூர்வமன்று.

நத்தால்கால சிலுசிலுப்புகளால் ஏமாந்துபோகாமல் அவருடையபிறப்பு மனிதஈடேற்றத்துக்காகவேஎன மனதிற்பதித்துக்கொள்வோம். நாம் நத்தால்திருநாளை அவர் எமதுஇரட்சிப்புக்காக ஒப்புக்கொடுத்த (பூசைப்) பலிக்கிருத்தியத்தில் அனுசரிப்போம். பீடத்தின்நடுவிற் சிலுவை; குருவானவரின்பூசைஆயத்தங்களிற் சிலுவை. பூசையில் "பரிசுத்த ஆவியினால் கன்னி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# இருநூறு ரூபா

(சென்றவாரத் தொடர்ச்சி)

"அம்மாவுக்கு வாங்கலேன்னல் எனக்கும வேண்டாமப்பா" என்று ராஜா இதுவரை பெற்றோருடைய சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டுக் கூறினன்.

"இல்லேயடா ராஜா! அம்மாவுக்கும் வாங்கத்தான் தெண்டிக்கிறேன்" என்று கூறியபாபு ராஜாவைத் தூக்கி ஓர் முத்தம் கொடுத்தான். பின்பு ஏதோதீர்மானத்துக்கு வந்தவன் போலக் காரையும் எடுத்துக்கொண்டு வெளியேகிளம்பினன். அன்றுமாலை வரை அவனுடையகாருக்கு வாடகையே கிடைக்கவில்லை. எல்லாக் கார்ச்சாரதிகளும் புதாகக் கார்கள் வைத்திருக்கும்போது, பாபுவின் பழையமாதிரிக்காரை யார் லட்சியம் செய்வார்கள்?

* * *

அதன்மேல்தான் நாம் பாபுவைக் கோவிலில் கண்டோம். கோவிலிலிருந்து நேரேபுகையிரதஸ்தானத்துக்குச சென்றான் அல்லவா? வண்டிகள் வந்துபோய்க் கொண்டிருந்தன. பிரயாணிகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தார்கள். ஒரு பிரயாணியாவது தன்னுடைய காரில்ஏற முன்வர மாட்டாரா என்ற துளிஆசையுடன் வண்டிகளிலிருந்து இறங்கும் பிரயாணிகளிடம் "சார், சார்" என்று கெஞ்சினன்.

ஒருவரும் ஏறமுன்வரவில்லை, விரக்தியுடன் கொட்டும்பனியில் காருடன் சாய்ந்து நின்றுகொண்டிருந்தான் பாபு. கடைசியாகஒருபுகையிரதம் 7மணிக்கு வந்தது. நம்பிக்கையைக் கைவிடாமல் திரும்பவும் முயற்சிசெய்தான். 45 வயது மதிக்கத்தக்க ஒருமனிதர் பெட்டிபடுக்கைகளுடன் பாபுவின் காரில் ஏறினர்.

"நேரே கடைத்தெருவுக்கு விடப்பா" என்றஉத்தரவு வந்தது. கடைத்தெருவில் அந்தமனிதர் இறங்கி ஒரு வியாபாரநிலையத்துக்குள் நுழைந்தார். 300 ரூபாவுக்குக் கிறிஸ்மஸ் விழா கொண்டாடுவதற்குப் பொருள்களும், புடவைவகைகளும், 100 ரூபாவுக்கு ஒருகைக்கடிகாரமும வாங்கினர். எல்லாவற்றையும் பத்திரமாகக் காருக்குள் எடுத்துவைத்தான் பாபு.

ஓடிக்கொண்டிருந்த கார் திடீரென நின்றது. பாபு காரைப் பரிசோதித்தான். பெற்றோல் முடிந்துவிட்டது. ஆனல், நல்லவேளையாக 400 யார் தூரத்தில் ஒரு 'பெற்றோல் ஷெட்' இருந்தது. பாபு அந்தமனிதருக்கு முன் வந்துநின்று தயங்கினன். எந்தக் கணம் தன்மீது சீறிவிழுவாரோஎன்று எண்ணிக்கொண்டிருந்த பாபுவுக்கு அவருடைய இனியசெயல் வியப்பைக் கொடுத்தது.

பாபுவின் தயக்கத்தைப் புரிந்துகொண்டஅவர் "பக்கத்தில் பெற்றோல் பாங்க் இருக்கிறதா?" என்று கேட்டார். பாபு தலையசைத்தான். "இந்தாப்பா! இந்த ரூபா நோட்டைக் கொடுத்துப் பெற்றோல் வாங்கிவா" என்று பணத்தைஎடுத்து அவன் கையில் கொடுத்தார்.

"சிரமத்துக்கு மன்னிக்கவேணும் சார்; இதோ, வாங்கிவருகிறேன்" என்று கூறிவிட்டு விரைவாக நடக்க ஆரம்பித்தான் பாபு.

பாபு பெற்றோல்வாங்கிக்கொண்டு திரும்பினன். எங்கும் இருள் படர்ந்திருந்தது. வீதியில் இடையிடையே காணப்பட்ட மின்சாரவெளிச்சங்களால் திரண்டுபடர்ந்திருந்த பனிப்படலத்தை ஊடுருவி ஒளிவீசமுடியவில்லை.

சிறிதுதூரத்தில் அவனுடைய கார் கறுப்புவர்ணவஸ்துவாகக் காட்சியளித்தது. அதேசமயத்தில் அவனுடைய உள்ளுணர்வு "விரைவாகப் போ" என்று உறுத்துவதாகப் புலப்பட்டது அவனுக்கு. உள்ளத்தில் ஒருவித கலவரத்துடன் ஓடஆரம்பித்தான்.

காருக்குப்பக்கத்தில் சென்றவுடன் தான் பெற்றோல்வாங்கப் போகும் போது எரிந்துகொண்டிருந்த காரின் உள்வெளிச்சம் அணைந்துபோயிருப்பதைக் கவனித்தான். "சார்" என்று மெதுவாக அழைத்தான். பதிலில்லை. நெஞ்சு "திக் திக்" கென்று அடிக்கத் திக்பிரமையுடன் வெளிச்சத்தைப் போட்டான். அவனுக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

அந்தமனிதர் பேச்சின்றி ஆசனத்தில் மல்லாந்து சாய்ந்திருந்தார். நெற்றியில் வீக்கமொன்று காணப்பட்டது. அவர் கடையில் வாங்கிய பொருள்கள் அடங்கிய "பாஸல்" தொலைந்துபோயிருந்தது. பாபு நடந்ததை ஊகித்துக்கொண்டான்.

கைகளைஉயர்த்தியவாறு கார்வந்த வழிநீளம் ஓடஆரம்பித்தான். வீதி வெளிச்சத்தின் மங்கலானஒளியானது சிலசாமான்களுடன் ஒருவன் பதுங்கிப் பதுங்கிப் போய்க்கொண்டிருப்பதைக் காட்டியது. நிதானமாகவும், விரைவாகவும் நடந்து இரண்டேஎட்டில் அவனைப் பிடித்துக்கொண்டான். பாபுவின் குத்துக்களைத் தாங்கஇயலாமல் சுருண்டுவிழுந்தான் அவன்.

அந்தமனிதர் வாங்கிய பாஸலும், கைக்கடிகாரமும், பணப்பையும், அவனிடம் காணபபட்டன. அதேசமயம் "ரோச்"விளக்குடன் அவ்விடம்வந்த "பீற்" பொலிஸ்காரன் வெளிச்சத்தை அடித்தான் திருடன்மீது. ஸ்ரலின் மீசையுடன் இந்தத்திருடனைக் கடையில் அந்தமனிதர் பொருள்கள்வாங்கும்போது கண்டதாக ஞாபகம்வந்தது பாபுவுக்கு. பாபு சகலத்தையும் பொலிஸ்காரனிடம் விஸ்தரித்துக் கூறினன்.

திருடனைப் பிடித்துக்கொண்டு கார் நின்றஇடத்துக்குச் சென்றார்கள். அந்தப்பெரியவர் அப்போதுதான் சுயநினைவுக்கு வந்திருந்தார். நடந்தவைகளைக் கூறி, அவருடையபொருள்களை அவரிடம் சேர்ப்பித்தான் பாபு.

* * *

கார் திரும்பவும் போய்க்கொண்டிருந்தது. பாபு பெற்றோல்எடுத்துவரச் சென்றதும் ஒருவன்வந்து தடியால் தாக்கியதாகவும், பின்னர் நடந்தொன்றும் தனக்குத்தெரியாதெனவும் கூறிப் பாபுவைப் பாராட்டினர் அவர்.

"உனக்குத் தெரியுமாப்பா, என் பணப்பையில் எவ்வளவுரூபா இருக்கதென்று?" என்று கேட்டுவிட்டுப் "பத்தாயிரம்அப்பாபத்தாயிரம்" என்று தானே மறுமொழிசொல்லிய அந்த மனிதர் இரண்டு நூறுரூபாநோட்டுகளை "ஸ்டியரிங்" சக்கரத்தைப் பிடித்துக்கொண்டிருந்த பாபுவின் விரல்களுக்குள் திணித்தார்.

* * *

பாபுவும், பரிமளாவும், ராஜாவும் பாலயேசுவின் ஜயந்தியை எப்படிக் கொண்டாடியிருப்பார்களென்று நான் கூறத்தேவையில்லை, ஆனல், ஒன்று மட்டும் கூறுவேன்: 200 ரூபா கிடைத்தவுடன் பாபு 20 ரூபாக்களை அப்படியே பாலயேசுவுக்கு உபகரித்தான். அன்றுமாலை விம்மிவிம்மி அழுதபடி ஒரு இருபது ரூபாவாவது தரும்படி அவரிடம்அவன்கேட்டதற்கு இருபதுரூபாதானு அவர்கொடுத்தார்? இருநூறு அல்லவா?

[யாவும் கற்பனை]

**உந்நதங்களில் சர்வேசுரனுக்கு மகிமையும், பூலோகத்தில் நல்மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக! — லூக். 2, 14.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி மாதம்

**திவ்வியபாலனை யேசுவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.**

**பொதுக்கருத்து:** ஞாயிறு, கடன் திருநாட்களை ஆசாரத்தோடும், பக்தியோடும் அனுசரித்து வரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** கிழக்கோடி நாடுகளில் பொதுவுடைமை வாதிகளால் அவதியுறுவோருக்காக மன்ருடிக் கொள்வது.

சத்திய வேத
பாதுகாவலன்
1957-ம் ஆண்டு
மார்கழிமாதம் 26-ந் திகதி



## பெத்லகேம் நகரம்

"இதோ, எல்லாச்சனத்துக்கும் மகாசந்தோஷத்தைவருவிக்கும் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். அதேதெனில், இன்று தாவீதின் நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிருர். குழந்தையைத் துணிகளிற்சுற்றி, முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்."—தேவபாலன் பிறந்தஅன்றிரவு பெத்லகேமின்சுற்ருடலிலே விழித்திருந்து, தங்கள் ஆட்டுமந்தைக்குச் சாமக்காவல் காத்துக்கொண்டிருந்த இடையர்களுக்குத் தேவதூதன் சொன்ன இந்தச்சுபசெய்தியானது வருடந்தோறும் நத்தால்திருநாள் வரும்போதெல்லாம் அகிலமுழுவதும் எதிரொலி செய்து மக்களின் உள்ளங்களை மகிழ்ச்சிவெள்ளத்தில் மூழ்கச் செய்கின்றது. பெத்லகேம் தாவீதனின் நகரம். அங்கேயே இவர் பிறந்தார். ஆகவே, தாவீதின் குமாரனுகிய யேசு இரட்சகரும் அங்கேயே பிறக்கவேண்டியிருந்தார். ஏனெனில், அவ்வாறே தீர்க்கதரிசனமாக ஏற்கனவே சொல்லப்பட்டிருந்தது.

ஆம், அவர் தாவீதின்குமாரன். கிறீஸ்துநாதர் "யாருடைய குமாரன் ?" என்று பரிசேயரை அவரே கேட்டபோது, அவர்கள் "தாவீதின்குமாரன்" எனப் பகருகின்றனர். "யேசுவே ! தாவீதின்குமாரனே, என்பேரில் இரக்கமாயிரும்" என்று தான்பார்வையடையவேண்டிப் பாதையோரத்தில் உட்கார்ந்திருந்தகுருடன் அவரைக் கூவியழைக்கின்ருன். அவர் ஜெருசலேம்பட்டணத்தில் ஒட்டோலகமாய் எழுந்தருளியபோது, தாவீதன்குமாரனுக்கு ஓசன்ன !" என்று திரளானசனங்களும், பிள்ளைகளும் ஆர்ப்பரிக்கின்ருர்கள். உலக இரட்சகர் பெத்லகேம் நகரிலேயே பிறப்பாரென்று தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருந்தது. சோதிட சாஸ்திரிகளுக்குப் பதிலிறுக்குமாறு ஏரோதரசன் பிரதான ஆசாரியரையும், வேதபாரகரையும் ஒன்ருகக்கூட்டிக் கிறீஸ்துவானவர் எங்கேபிறப்பாரென்று அவர்களிடம் விசாரித்தபோது, "........பெத்லகேம்ஊரில் தான் ; ஏனெனில், தீர்க்கதரிசிகளால் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது" என்றுஅவர்கள் பதிலளித்தார்கள்.

இன்னும் பெத்லகேம்என்ருல் "அப்பத்தின் இருப்பிடம்" என்று அர்த்தமாகும். அதனல், சீவியஅப்பமாகிய — பரலோகத்திலிருந்து இறங்கிவந்த அப்பமாகிய யேசுபிறக்க அதுசாலவும் பொருத்தமான நகரமாகும். சீயோனும் தாவீதன்நகரமென்று அழைக்கப்பட்டிருக்கிறது. ஆனல், சீயோனிலே தாவீதரசர் வல்லபத்தோடும், செல்வச்செழிப்போடும், செல்வாக்கோடும் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்தார். ஆயினும், பெத்லகேமிலே அவர் ஓர் இடையனுயிருக்க வறுமையில் பிறந்தார். தம்மைத்தாமேதாழ்த்திக்கொண்ட நமது இரட்சகரும் தாம்பிறக்குமிடமாகப் பெத்லகேமையே தெரிந்துகொண்டார்.

ரோமைச் சக்கராதிபத்திய ஆதிக்கம் உச்ச நிலையடைந்து, பாத்தியாமுதல் பிரித்தானிவரை அத்துணை விசாலமாகப் பரந்திருந்தபோது, சேசார் அகுஸ்துஸ் சக்கிரவர்த்தி அதனைஆட்சிசெய்துவந்தகாலத்திலே யேசுபிறந்தார். அப்போது ரோமைச்சக்கிராதிபத்தியம்'பூமண்டலஆட்சி' யென்று அழைக்கப்படலாயிற்று. ஏனெனில், நாகரீகஉலகிலே அதில்அடங்கியிராதபகுதி மிகஅரிதாகவேயிருந்தது. அதனுல்தான் குடிசனக்கணக்கென்பது உலகமுழுவதையும் குறிப்பதாயிற்று. சனக்கணக்கு எடுக்கப்படவேண்டுமென்று—ஒவ்வொருவரும் தன்தன்சொந்தஊர் சென்று பெயர்எழுதிக்கொடுக்க வேண்டுமென்று சேசார் அகுஸ்துஸ் பிறப்பித்த கட்டளையின் பேரிலே தாவீதரசனின் கோத்திரத்தையும், குடும்பத்தையும் சேர்ந்தவர்களான சூசையப்பரும், கன்னிமரியம்மாளும் கலிலேயாவிலுள்ள நசரேத்திலிருந்து, யூதேயாவிலுள்ள பெத்லகேமென்னும் தாவீதுநகரத்துக்குச் சென்ருர்கள். சேசார் அகுஸ்துஸ் பிறப்பித்தகட்டளையானது இஸ்ருயேலின் புராதனதீர்க்கதரிசனங்களை நிறைவேற்றிப் பூர்த்திசெய்து வைக்கின்றது. மெசியாஸ்எனப்படும் கிறீஸ்துநாதர்—சமாதானத்தின் இளவரசர் ஜனனமாகின்ருர். அவரது ஜனன சுபசெய்தியானது சம்மனசானவரால் இடையர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. வானுலகசேனை இடையர்கள்கேட்கச் சமாதான கீதம் பாடுகின்றது. இந்தச்சமாதானத்தைஉலகமுழுவதிலும் பரந்துள்ள தனதுஞான மக்களுக்குத் திருச்சபையாலே திரும்பத்திரும்பக் கூறுகின்றது. "நீதியுடன்கூடிய சமாதானம்" என்று கிறீஸ்துநாதரின்பதிலாக உலகில்இருந்துவருகின்ற 12-ம் பத்திநாதபாப்பரசர்வேண்டுகின்ருர். ஒவ்வோர்தேசமும் சமாதானத்தை ஆசிக்கின்றது. ஒவ்வோர்தேசத்துக்கும் சமாதானம் தேவைப்படுகின்றது. அகிலமுழுவதும்ஒரேகுரலாய், ஒரேதொனியாய்ச் சமாதான வேண்டுதல் செய்கின்றது. மக்களை ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் இந்தச் சமாதான வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தாலோ! பெத்லகேம்நகரில் சம்மனசுகள்பாடிய சமாதானகானத்துக்கு அத்திவாரம்போன்றுள்ள நல்மனதைக் காண்பித்தாலோ ! நத்தால்காலம் சமாதானத்துக்கும், சந்தோஷத்துக்குமுரிய ஓர்சுபகாலம். தேவபாலன் பிறந்தபோது இடையர்களுக்குத் தேவதூதனின் சுபசெய்தியையும், வானசேனையின் ஆனந்தகீதத்தையும் ஞாபகத்தில் கொணர்ந்து இச்சுபகாலத்திலே நாமும் நம்முடையபத்திரிகைச் சந்தாதாரர்களாய், அபிமானிகளாய் இருந்துவருவாருக்கெல்லாம் கர்த்தரிலே சுகமும், ஆசீர்வாதமும்விரும்பி நத்தால் சோபனம் கூறுகின்ருேம்!

---

## குருத்துவ வெள்ளியூபிலி

நாம் முன்னர் தெரிவித்திருந்த பிரகாரம் மாதகல் கட்டளைக் குரவரும், நமது பழைய மாணவரான ஒரேயொரு குருப்பிரசாதியென்று நம்மால் அருமை பெருமை பாராட்டப் பெற்று வருகிற வருமான வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களும், கொழும்பிலே நுகேகொடையிலுள்ள அர்ச். சூசையப்பர் நவசந்நியாசர்கள் மடத்தில் இருந்து வருகிறவரான வண. ஏ. ஜே. பி. அன்ரனைஸ் சுவாமியவர்களும் நிகழும் மார்கழி மாதம் 27-ந் திகதி வெள்ளிக்கிழமை தங்கள் குருத்துவ வெள்ளி யூபிலியைக் கொண்டாடுவார்கள். யூபிலிநாயகர்களிலே வண. ஞானப்பிரகாசம் சுவாமியவர்கள் அன்றுகாலை மாதகல் அர்ச். தொம்மையப்போஸ்தலர் ஆலயத்திலே தமது யூபிலித் தோத்திர பாடற்பூசையை நிறைவேற்றுவார். வண. அன்ரனைஸ் சுவாமியவர்கள் அன்றுகாலை பம்பலப்பிட்டியிலுள்ள அர்ச். மரியநாயகியின் ஆலயத்திலே தமது யூபிலித் தோத்திர பூசையை நிறைவேற்றுவார். இன்னும் இலாபமேற்றிராசனத்திலே மட்டக்கொட்டுவாவின் கட்டளைக் குரவரும் இரட்டைப்பிள்ளைகளான குருசகோதரர்களில் ஒருவருமான வண. மத்தியு தமெல் சுவாமியவர்களும் அன்றுதினம் தமது குருத்துவ வெள்ளி யூபிலியைக் கொண்டாடவிருக்கின்ருர். யூபிலிநாயகர்கள் மூவருக்கும் நாமும் இச்சுபசந்தர்ப்பத்திலே நமது தாழ்மையான சோபன வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்ருேம். அவர்கள் கூடிய சுகபலத்துடனும், நீடிய ஆயுசுபலத்துடனும் இன்னும் பல்லாண்டுவாழ்ந்து, முன்னிலும்பன்மடங்கு தேவதோத்திரவாஞ்சையுடன் ஆன்ம இரட்சணிய தொண்டாற்றிவரத் தமது திருவருட்பிரசாதங்களைப் பொழிந்து அருள்பாலிக்குமாறு எல்லாம்வல்ல இறைவன் திருவடிகளை இரந்து நிற்கின்ருேம்.

## கால்கள் இல்லாதவரின் கத்தோலிக்க சேவை

பிரித்தானியிலும், அயர்லாந்திலுமுள்ள விசாரணைப்பங்குகள் முழுவதிலும் கத்தோலிக்க புத்தகங்கள், பத்திரிகைகளைக் கத்தோலிக்கஇல்லங்களில் கொண்டு சென்றுவிற்றுப் பரப்புவதில் வாரந்தோறும் தங்கள்நேரத்தையும், சக்தியையும்செலவிட்டுக் கத்தோலிக்கசேவை ஆற்றிவருகின்ற ஆயிரக்கணக்கான கத்தோலிக்கஆடவர்கள், பெண் மணிகளில் மிக்கேல் கிங்ஸ்ரன் என்பவரும் ஒருவர். ஆனல், இவர் சுகபலதேகிகளான மற்றவர்களிலும் அதிகம் வேறுபாடுடையவர். ஏனெனில். இவர் கால்கள்இரண்டும் இல்லாதவர். செயற்கைக் கால்களை — அதாவது பொய்க்கால்களையே கொண்டுள்ளவர். யோக்ஷையரிலே ஸ்கோட்ரன் நகரிலுள்ள அர்ச். தேவஅருளப்பர் ஆஸ்பத்திரியில் பன்னிருவருடங்களாக ஓர் நோயாளியாய் இருந்துவருகின்ற இவர் ஆஸ்பத்திரிப் புத்தகச்சாய்ப்பை அதிகம் சிறந்தமுறையிலே புழக்கமாக நடத்திவருகிருர். தனது விசாரணைப்பங்கிலே கத்தோலிக்கபத்திரிகைகளை விநியோகிப்பதற்குப் பொறுப்பாயுள்ளவர்களுள் இவரும்ஒருவர். இவர்தனது றிக்காரை—அதாவது ஒரேயொரு ஆசனத்தைக்கொண்ட தனது சிறியவண்டியை வாரந்தோறும்ஒருமுறை ஸ்கோட்ரன் றெயில் வேஸ்றேஷனுக்குச் செலுத்திச்சென்று தாம்விநியோகிக்கும் பத்திரிகைகளையெல்லாம் பெற்றுத் திரும்புகின்ருர். டபிளின்நகரில் பிறந்தவரான இவர் தனது நான்காவதுவயதுமுதல் ஆஸ்பத்திரியிலேயே இருந்துவருகின்ருர்.

---

## திருக்குழந்தை யேசு......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உலையும் ஒரு பாவிச்சகோதரனின் ஆத்துமத்தைத் திவ்விய குழந்தையிடம் கூட்டிச்சென்று அவர்முன் நிறுத்திவிடு.

இதைச்செய்வது எப்படி? ஒருசிறு துண்டுக்கடுதாசியிலே அந்த நிர்ப்பாக்கியனின்பெயரை எழுது. ஆனல், முழுப் பெயரையும் எழுதவேண்டாம். உதாரணமாக, அவன்பெயர் பீற்றர் போல் என்ருல், "பீ. போ." என்றுமாத்திரம் எழுது அதைத் திருக்குழந்தையின் பாதத்தில்வை. 3 நாட்களுக்கு நீ திவ்விய பூசைகண்டு, அன்றேல் கிழமையிலே ஒருபூசையாவது கண்டு செபமாலையில் ஒரு காரணிக்கமாவது சொல்லி, எந்நாளிலும் ஏதாவதுஒரு தபக்கிரிகையைச் செய்து, அந்தஆத்துமம் மனந்திரும்பும்படியாக மன்ருடி வருவேன்என்று பாலயேசுவுக்கு வாக்குப்பண்ணு. அவ்விதமே செய்து கொண்டுவா. பாலயேசு நிச்சயமாகவே அந்தஆத்துமத்தை மனந்திருப்புவார், உனது நாமத்தையும் சீவியர்களின் புத்தகத்திலே வரைந்துவைப்பார். இதுதான் சகோதரமே நான் உனக்குச்சொல்லும் நத்தால்சோபனம். சுபம்!

---

மிருகங்களுக்கு ந[illegible] அன்பும், அகிம்சையும் காட்டப் பலகாரணங்கள் உண்டு. அவைகளுக்கும், எமக்கும் ஒருவரே ஆதிகாரணர்என்பது பிரதான காரணம்.

அர்ச். பொன்மொழி அருளப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



## அண்ணா சொல்வது



**அருமைச் சகோதரங்களே!**

யேசுபிறந்த மகிழ்ச்சிநிறைந்த தினம் இதோ வந்துவிட்டது. இச் சுபதினத்தில் உங்கள் அனைவருக்கும் பாலயேசுவின்அன்பை விரும்புகிறேன்.

யேசு மாட்டுத்தொழுவத்தில் மனிதனாய்ப் பிறந்தாரே. ஏன்? நாம் இழந்து போன தேவ அன்பை எமக்குத் தரும்படி. இந்த அன்பு எம்மைத் தேவ மக்களாக்கும். அவருடன் எந்நாளும் பரகதியிற் சீவிக்கும் உரிமை தரும். இந்த நத்தால் விழா உங்களை யேசுவுடன் இணைக்க வேண்டுகிறேன்.

இத்தருணத்தில் "புனிதவீரர்" பக்கத்திற்குக் கதைகள், கவிதைகள் முதலியன எழுதிச் சிறப்பிக்கும் அன்பர்களுக்கும், அச்சகத் தலைவர், நண்பர்கட்கும் நத்தாற் சோபனமும், புதுவருடத்தில் அமலனின் ஆசியும் கூறுகிறேம்.

உங்கள்அன்புள்ள,
அண்ணா.

—(⌒)—

## ஏதனைத் தருவேன்!

ஏழையொருவன் இன்னலின்வடிவம்
வாஞ்சை, தூய்மை வளர்பெருமகத்தோன்
பெத்தலேச்சிற்றூர்ப் புல்லணைப்பிறந்த
குழந்தைமலர்த்தாள் கும்பிடச்சென்றான்
கையுறையில்லைக் காணிக்கையில்லை
கனகமும், வெள்ளியுங் காணுப்பிறவி
அன்னைமின்கரத்தே அமலனைக்கண்டான்
கண்ணீர்பொழியக் கலங்கித்தொழுதான்
"பொன்னும், மீறையும், பொற்கிழிப்பரிசும்
தந்துபணிவார் தாரணிவேந்தர்
ஏழையான்ஐயா! ஏதனைத்தருவேன்"
என்னக்குமுறி இதயம்பிளந்தான்
"அன்னையே! தாயே! என்னையாள்" என்றான்
ஏழையின்துயரும் ஏக்கமுஞ்சோர்வும்
மாசறுகன்னி மாமரிகண்டாள்
கருணைநயனங் கனியநோக்கினள்
குமுதமலர்வாய் அமுதஞ்சொரிந்தாள்
"ஏழைமகனே! ஏனேகலக்கம்
உன்அன்பொன்றே உயர்கொடை" என்றாள்

"ஜெயம்"

—(⌒)—

## மேற்றிராணி ஆண்டகை அவர்களின் கடிதம்

**கிறிஸ்துவில் எமக்கு மிகவும் அருமையான பிள்ளைகளே!**

ஒரு பையனிடம் பல பந்துகளிருந்தன. அவன் அவைகளை எறிந்து விளையாடினான். அவன் எறிந்த பந்துகளில் ஒன்று தொலைந்து போனது. பல இடங்களிலும் அதைத் தேடினான். வெகுநேரமாகத் தேடினான். இறுதியில் கொல்லையின் ஒரு மூலையில் ஊத்தைக்குள் கிடந்து எடுத்தான்.

நத்தால் விழாவின் கருத்து இக் கதையில் உண்டு. முன்கூறிய பந்துகள் கடவுள் படைத்த கோளங்கள். பூகோளமே (அதாவது மனிதர்) தொலைந்துபோனது. அதைத்தேடி வந்தவர் எம் இரட்சா பெருமான் யேசு.

"இந்நேரம் வந்த தேதையா?......
இந்நேரம் வந்ததெல்லாம்
ஏவை அதஞ்செய் பொல்லாச்
சென்மபவத்தை யெல்லாஞ்
செகத்தில் துரத்திவெல்ல
பழவிஷத்தாலே வந்த
பவத்தைத் துரத்தி வெல்ல."

எனும் பாவடிகள் அதை விளக்குகின்றன.

நாம் ஒவ்வொருவரும் அறிந்து அனுசரிக்க வேண்டிய நன்மதி ஒன்றைப் பெத்திலேமின் திருக்குழந்தை புகட்டுகிறார். "என் விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பினவரின் (பிதாவின்) திருவுளத்தை நிறைவேற்றவே பரலோகத்திலிருந்து வந்தேன்" (அருள. 6, 38). பிதாவின் விருப்பம் என்ன? திருப்பாலனே விடை கூறுகிறார்: "குமாரனைக் கண்டு அவரிலே விசுவாசங் கொண்டு ஒவ்வொருவனும் நித்திய சீவியத்தை அடைய வேண்டும் என்பதே என்னை அனுப்பின பிதாவின் திருவுள்ளம்" (அருள. 6, 40).

கடவுள் மனிதனாய் அவதரித்த மாமிச ஐக்கிய பரம இரகசியத்தின் உட்பொருள் இதுவே. பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாவது ஆள் மோட்ச சிம்மாசனத்தைத் துறந்து எமது மானிட சுபாவந் தாங்கி எமது மூத்த சகோதரனாகி, பாவத்தைத் தவிர மற்றெல்லாவற்றிலும் எம்மைப்போலானார். இதெல்லாம் எதற்கு? தமது பிதாவின் திருவுளத்தை நிறைவுபடுத்த; எமக்கு இறைவன் அருள்தர; எம்மை ஈடேற்ற; இறைநாட்டிற்கு எமக்கு வழி துறக்க. நாம் எமது அழைப்பிற்கு ஏற்க நடந்து கிறிஸ்துவின் அடியாராக விரும்பினால் நாமும் அப் பரம பிதாவின் திருச்சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

சுருங்கக்கூறுகில் கடவுளை அறிந்து, அன்பு பாராட்டி வழிபடுவதாலும் அவர் எமக்கு அருளியவைகளுக்காக உதாரமான, இயன்ற கைம்மாறு செய்வதாலுமே நாம் அத்திருவுளத்தை நிறைவேற்றலாம். இவ்வாறு பாலயேசு இழந்த பந்தைத் தேட நாம் அனைவரும் உதவலாம்.

இவ்வரங்களுக்கு அச்சாரமாக உங்களுக்கு நாம் ஆசி அளித்து நத்தாற் சோபனமும் புதுவருடத்தில் நிறைவான தேவ வரங்களும் விரும்புகிறேம்.

கிறிஸ்துவினதும் அமலோற்பவ அன்னையினதும் பேரால்,

உங்களன்புள்ள
✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்

—(⌒)—

## சிவப்பு வண்டில்

எமிலியான்மோட்டை கிராமப்புறம். கிராமப் புறங்களில் நத்தார்க் கோலமும் கருத்தும் எக்காலத்திலும் காப்பாற்றப்பெற்று வருகிறது. நத்தார்த் திருவிழாவிற்கு முந்திய நாளில் ஊரிலுள்ள கோவிலில் குடில் அமைப்பதும் பாலயேசுவின் பிறப்புக் காட்சிக்குரிய சுரூபங்கள் வைப்பதும் வழக்கம். சூசைமாமுனிவரின் சுரூபம் ஒருபக்கத்திலிருக்கும்; மாதாவின் சுரூபம் தொழுவத்துக்கருகில்; பாலயேசு கைகளை விரித்தபடி தொழுவத்தில்; கழுதையும் எருதும் குகையின் ஒருமூலையில். குகைக்குமேலே சோதிட சாத்திரிகளுக்கு வழிகாட்டிய நட்சத்திரம்.

நத்தார்விழா அதிகாலை. மூன்றும் பூசையின்முன் சுரூபங்கள் எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா எனப் பார்க்கச் சென்றார் சுவாமி சூசைநாதர். ஏமாற்றமும் ஏக்கமும் அடைந்தார். பாலயேசுவின் சுரூபம் அங்கு இல்லை. அக்கம் பக்கத்தில் அதிக நேரந் தேடியும் கிடைக்கவில்லை. கோவில் வீதிக்கு வந்த பொழுது ஏதோ இரைச்சல் அவர் காதுகளைத் துளைத்தது. ஒரு சிறுவன் சிவப்பு வண்டி ஒன்றை இழுத்துக்கொண்டு ஓடினான்.

அவன் குணாளன். கொல்லன் தம்பையாவின் மகன். சுவாமிக்குச் சிரிப்பு வந்தது. குணாளனுடன் கதைத்தார். ஆகா! அவன் இழுத்துச்சென்ற விளையாட்டு வண்டியில் யேசுபாலன் சுரூபமிருந்தது.

(அடுத்தபக்கம் பார்க்க)

—(⌒)—



## தேவபாலன்

தேவ பாலன் பூவினில்
சென்மித் தாரே மானிடனாய்
*
வானம் மாரி பெய்யாதோ
மன்னன் குடிலில் பிறந்திட்டான்
*
உலகின் கவலை ஒழியாதோ
ஒப்பில் லாதான் வந்திட்டான்
*
அமைதி எங்கும் நிலவாதோ
அச்சம் நீங்கி வாழோமோ
*
வாடை பனியால் நொந்துடல்
வாய்விட் டழுதல் ஏனையா?
*
தேடிப் பார்த்தும் ஓர்இல்லம்
தேவ பாலர்க் கிங்கில்லை
*
உள்ளம் என்ற இல்லத்தை
உறையக் கொடுக்க வருவீரே!
*
மயிலே குயிலே வாருங்கள்
வானோர் பாலனைப் பாருங்கள்.

**.... இதோ! கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை ஆராதிக்க வந்தோம் — மத். 2, 2.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"குஞ்ஞளா! நீதானு? ஏன் பாலயேசுவின் சுரூபத்தை எடுத்தாய்?" எனக் கனத்த குரலிற் கேட்டார்.

குஞ்ஞளன் தலையைத் தொங்கவிட்டுக் கால்விரல்களை எண்ணுபவன் போல் நின்ருன். சுவாமி கடுமையாய் ஏசினுர். சிறுவன் ஒருவார்த்தை சொன்னுனில்லை; பதிலாய் நிலத்தைக் கிளறினுன் பெருவிரலால்.

"நத்தாருக்கு ஒரு சிவப்பு வண்டில் கிடைக்க வேண்டுமென்று மன்ருடினேன். சிவத்தவண்டில்கிடைத்தால் பாலயேசுவை அதில் வைத்துச் சவாரி செய்வேன் என மன்ருடினேன். இன்று அவர் பிறந்த நாளல்லவா?" என்ருன் அழுது கொண்டு.

சூசைநாதர் சுவாமிக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. அவருடைய கடைக்கண்களில் நீர்த்திவலைகள் காணப்பட்டன.

"இப்பதான் விளங்குது தம்பி; நான் இதை அறியாமல் அல்லோ, தம்பியைச் சரியாய்ப் பேசிப்போட்டேன். அது சரி; இன்று அவர் பிறந்தநாள்; குஞ்ஞளன் நல்ல வெகுமதி கொடுத்திருக்கிருன்," என்ருர்.



## வாழ்த்துவமே!



வானிற்தூதர் இசைபாட மன்னர்மூவர் துதிகூடக்
கானிலாயர் களிகூடக் கரியவலகைக் கணமோடக்
கோனிற்சிறந்த தவிதுகுலக் கோமான்பிறந்தார்! பிறந்தாரே!
தேனிற்குழைத்த மதுரமொழி திசைகளெட்ட வாழ்த்துவமே!

# யேசு பாலகனின் திரு ஜனனம்




1. மாரிக் கடுங்குளிர் மார்கழிச் சாமத்தில்
வானிறை யோன்பூவில் தான்பிறந்தார்
வாரி யணைத்தனர் மாதுமரியொடு
மாதவன் சூசையே பாருமம்மா!

2. பட்டி நடுவிலே தொட்டில் மறைவிலே
பாலனுக் காதர வாகநின்ருர்
கட்டி எமையன்பாய்க் காத்திடும் பூங்கொடி
கையிற் கொண்டவளன் பாருமம்மா!

3. நல்ல மனம்பூவில் உள்ளவர்க் கேநிதம்
நல்ல சமாதானம் நாடுமென்றே
வல்லபரன் சேனை வானுலகால் வந்து
வாழ்த்திடுங் காட்சியைப் பாருமம்மா!

4. காவல் செய்துநின்ற ஆயர்கள், வானவர்
கானங் கேட்டார்அர்த்த சாமத்திலே
ஆவலுடன்நின்று பாதம் பணிந்தன்பாய்
ஆசாரஞ் செய்தனர் பாருமம்மா!

5. மன்னவர் மூவர் வழிநடந் தேசுடர்
மங்கா முடியுடன் வந்துநின்றே
பொன்னுடன் மீறையும் தூபமும் வைத்தவர்
பூம்பதம் போற்றினர் பாருமம்மா!

6. பாவ வினைபோக்கப் பாரில்மனுவான
பாலக யேசுவின் பாதமலர்
ஆவலுடன் தொழும் ஆயர், மூவேந்தரின்
அற்புத காட்சியைப் பாருமம்மா!

7. பட்டுப் பணியோ பசுமலர்த் தொட்டிலோ
பஞ்சணை மெத்தையோ வேண்டாது
மட்டுக் கடங்காத வல்லபரன் துயில்
மாட்டுத் தொழுவத்தைப் பாருமம்மா!

8. ஆரீரோ ஆரீரோ தெய்வீக பாலனே
ஆரீரோ ஆரீரோ கண்வளராய்!
ஆரீரோ ஆரீரோ கண்வளர் பாலனின்
ஆனந்த காட்சியைப் பாருமம்மா!

—ஆனந்தம்

## சதாசகாயமாதா கோணம்



# "விடியற்காலத்தின் நட்சத்திரம்"

"கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக்கண்டு அவரை ஆராதிக்க வந்தோம்."

கர்த்தரை ஆராதிக்கவந்த சோதிட சாத்திரிகள் மூவரென்றும், அவர்கள் இராசபதவியில் உள்ளவர்களென்றும் பாரம்பரியங்கூறும். அவர்கள் செய்த பயணம் நீண்டதும், ஆயாசமிக்கதுமாய் இருந்தது. அவர்கள் தங்கள்சுய சீமையைவிட்டுப் புறப்பட்ட நேரந் தொடக்கம், "யூதர்களுடையஇராசா" பிறந்திருந்த மாட்டுத்தொழுவத்தை வந்தடையும்மட்டும் பிரபையுள்ள புதிய நட்சத்திரம்ஒன்று அவர்களுக்குவழி காட்டியது. அவர்கள் தொழுவத்திற் பிரவேசித்துத் தங்கள்இராசாவும், இரட்சகரும், தேவனுமாகிய திருப் பாலகனை அவர்தாயான மரியம்மாளோடுகண்டு, சாஷ்டாங்கமாகவிழுந்து அவரைஆராதித்தார்கள். மேலும், தங்கள்பொக்கிஷங்களைத்திறந்து பொன்னும், தூபவர்க்கமும், மீறையும் அவருக்குப் பாதகாணிக்கையாக வைத்தார்கள்.

இந்தநத்தால் சுபகாலத்திலே நாங்களும் அந்தமூவிராசாக்களைப்போல் பெத்லகேமிலுள்ள எளியமாட்டுத் தொழுவத்தை நோக்கியே செல்லுகிரேம். ஆனுல்,எங்களை வழிநடத்திச் செல்லும் வெளிச்சம், வானத்திற் தோன்றிய இயற்கைநட்சத்திரமல்ல, "விடியற்காலத்தின் நட்சத்திரம்" என்று அழைக்கப்படும் தேவதாயாரே. ஆம், மரியாயே எங்கள்சம்பூரண மேல் வரிச்சட்டம். எங்கள் சம்பூரணஉதவி. எங்களுக்கு வழிகாட்டும்விடிவெள்ளி. அவ்வின்ஒத்தாசையோடு கிறிஸ்துபாலகனை நத்தால்இரவு எங்கள் இருதயங்களில் வரவேற்க நாங்கள் ஆயத்தம்செய்வோமாக.

ஆகமனகாலத்தின் முதலாம்ஞாயிறுவாரந்தொடக்கம் நத்தாலுக்கு முந்திய தினம்மட்டும் எங்கள் முன்மாதிரியாகிய மரியாயைப்பற்றிப் பழையபுதியஏற்பாடுகளிலிருந்து பலஎடுத்துக்காட்டுகளை ஓயாது பரிசுத்தமாதாவாகிய திருச்சபை நமக்கு நினைவூட்டுகின்றது. னிதாவதாரத்தின் தேவதிட்டத்தில், ம தேவதாயார்வகித்துள்ள முக்கியத்துவத்தைப்பற்றி நாம் சரிவரஉணர்ந்து கொள்ளச் சிலஎடுத்துக்காட்டுகள் உதவியாயிருக்கும். அப்போது, அவளைப்போல நாமும் தேவபாலகன்முன் அடிபணிந்து ஆராதிப்பவர்களாவோம்.

"கர்த்தர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காண்பிப்பார். இதோஒருகன்னிகை கர்ப்பந்தரித்து ஒருபுத்திரனைப் பெற்றெடுப்பாள். அவர் எம்மனுவேல்என்று அழைக்கப்படுவார்."

கிறிஸ்துவின் வருகையைப்பற்றியும், திருச்சபைமூலம் அவருடைய அரசாட்சியைப்பற்றியும்உள்ள தீர்க்கதரிசன வாக்கியங்களுள் இசையாஸ் தீர்க்கதரிசியின் இந்தவாக்கியங்கள் மெத்த அழகானவை. இந்தஆச்சரியசம்பவங்கள் நடந்தேறும்என்பதற்குரிய அடையாளம்என்ன? கன்னிமை கெடாது கர்ப்பந்தரித்தல். "ஒருகன்னிகை அவரைப்பெற்றெடுப்பாள்." இந்த ஸ்திரி—இந்தக்கன்னிகை பிதாப்பிதாக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் வரவிருக்குஞ்சம்பவங்களுக்கு ஒருவாக்குத்தத்தமாக மாத்திரமே விளங்கினுள். ஆனுல், நாங்கள் அந்தத்தேவவாக்குத்தத்தத்தின் சுதந்தரபிள்ளைகள்; அத்திருவைபம் நடந்தேறிவிட்டதைக் காணும்பாக்கியசாலிகள்.

உலகம் பாவஅந்தகாரத்திலும், பொய்த்தேவவழிபாட்டிலும் மூழ்கியிருந்தது. விசுவாசமுள்ள சிலயூதசனங்கள் வாக்குப்பண்ணப்பட்டவரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். உலகத்தின் ஒளி உதயமாகிவிட்டது, நீதியின்தேவகுமாரனை ஒருகன்னிகை கர்ப்பந்தரித்திருந்தாள்என்பதை அவர்கள் அறிந்தார்கள்இல்லை. ஆண்டவருடைய சம்மனசானவர் "பிரியபிரசாத பூரணியேவாழ்க! ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே!" என்று மங்களம்சொல்லவே, தீர்க்கதரிசனவாக்கு நிறைவேறியதை மரியாய்மாத்திரம் அறிந்திருந்தாள்.

"இதோ உம்முடைய உதரத்தில் கர்ப்பந்தரித்து ஓர்குமாரனைப் பெறுவீர். அவருக்கு யேசுஎன்னும் நாமம்சூட்டுவீர். அவர்பெரியவராய்இருப்பார். உந்நதமானவருடைய சுதன் எனப்படுவார். ஆண்டவரானசர்வேசுரன் அவர்தந்தையாகிய தாவீதின்சிங்காசனத்தை அவருக்குத்தந்தருளுவார். ஆதலால், அவர் யாக்கோபின்கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார்."

இரட்சகரும், இராசாதிஇராசாவும், தேவனுமாகிய மரியாயின்சுதனைப்பற்றிச் சம்மனசானவர் இவ்விதம்விஸ்தரித்தார். தனதுகன்னிமைகெடாதென உறுதிபெற்றபின்னரே மரியாய் "இதோ ஆண்டவருடைய அடிமையானவள். உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" என்று தலைகுனிந்து தனதுதாழ்மையான சம்மதத்தைத் தெரிவித்தாள். தனது சம்மதத்தைக் கொடுத்தவுடனேதானே தேவசுதன் அவளதுகன்னிஉதரத்தில் மனிதாவதாரமாயினுர்.

மரியம்மாளின் வார்த்தைகள் பரலோகதேவனைத்தானே பூலோகத்துக்கு இழுத்துவந்தன. இந்தநத்தால் காலத்தில் நமதுமனநிலை எவ்விதமிருக்க வேண்டுமென்பதைக் காட்ட அவ்வார்த்தைகள் நமக்கு ஒருதிறவுகோல் போல இருக்கவேண்டும்.

திருச்சபையின் போதனைகளுக்கு அமைவாகத் தேவனுக்குத் தொண்டு செய்வதும், அவருடைய திருச்சித்தத்துக்கு அமைந்துநடப்பதும், தானதருமஞ்செய்வதும், தபஞ்செய்வதும் இந்த நாட்களில் எங்கள்குறிக்கோளாக இருக்கவேண்டும்.

"என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது. என் இரட்சணியமாகிய சர்வேசுரனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய்எழும்பி மகிழ்கின்றது. ஏனெனில், தமது அடிமையானவளுடைய தாழ்மையைக் கிருபாகடாட்சமாய்ப்பார்த்தருளினுர். ஆகையால், இதோஇக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப்பாக்கியவதி என்பார்கள்." இம்மேரையாகத் தேவமாதா திருச்சுதனைக் கர்ப்பந்தரித்ததும் தேவனைப்புகழ்ந்து, தோத்திர கீதம்பாடினு. தனது ஒன்றுமில்லாமையையும், ஆதியந்தமில்லாத நித்திய தேவன் தன்உதரத்தில் மானிடச்சட்டைசாத்தி உற்பவித்ததையும் நினைக்க நினைக்க மரியம்மாளுக்கு ஆனந்தம்ஒருபுறம், அதிசயம்ஒருபுறமாகவே, அவள் தேவனைவாழ்த்திப் போற்றித் துதித்தாள். எங்கள்மேற்கொண்ட அபார அன்புப்பெருக்கால் பூலோகத்துக்கு வந்த—மனுவுருவெடுத்துப்படாதபாடுகள்பட்டு நம்மைஇரட்சிக்கவந்த நரதேவனை நாமும்தோத்திரித்துப் புகழ்ந்துபாடுவோம்.

"விடியற்காலத்தின் நட்சத்திரம்" ஆகிய வழிகாட்டியை விசுவாசத்துடன் பின்தொடர்ந்துசென்ருல் மூவிராசாக்களைப்போல நாங்களும் தாயாகியமரியம்மாளோடு குழந்தை யேசுவைக் காண்போம். எங்கள்கீதம் "உன்னதங்களில் தேவனுக்குமகிமையையும், பூமியில் நல்லமனமுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக" என்ற சம்மனசுகளின்கீதத்தை ஒத்ததாகவிருக்கும். உள்ளபடியே கிறீஸ்துவின்சமாதானம் எங்கள்இதயங்களைப் பூரணமாகநிரப்பும். இதைவிடப் பூரணசந்தோஷம் எங்கும்காணமுடியாது.

"வாரும் வணங்குவோமே,
வாரும் வணங்குவோமே
வாரும் வணங்குவோமே—பாலனை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தால் பரிசு

மார்கழிமாதம் பிறந்ததும் யாவர் மனதிலும் நத்தால்திருநாளைப்பற்றிய சிந்தனையே. மங்களகரமான இந்தச் சுபதினத்தில் ஒவ்வோர் கிறீஸ்துவ குடும்பத்தினரும் தமது இனசனர், சிநேகிதர் ஆகியோருக்குச் சோபன வாழ்த்துகளாலும், அன்பளிப்புகளாலும் தங்கள் இதயங்களில் பொங்கியெழும் ஆனந்தத்தைத் தெரிவித்துக் கொள்வது சர்வசாதாரணம். இந்த வழக்கம் முதலாவதுநத்தால் தினத்திலிருந்தே — பெத்லகேமின் ஏழை இடையர்கள் யேசுபாலகனைத் தரிசிக்கச்சென்றபோது தங்களால சமர்ப்பிக்கக்கூடிய பாதகாணிக்கைகளைக் கொண்டுசென்றதிலிருந்தே ஆரம்பமாயிற்று. நவமாகத்தோன்றிய நட்சத்திரத்தால் வழிநடத்தப்பட்டுக் கீழ்த்திசையிலிருந்துசென்ற மூவரசர்களும் தூபம், பொன், வெள்ளைப்போளம்என்னும் மூவிதகாணிக்கைகளைக் கொண்டு சென்று திருக்குழந்தையேசுவுக்குத் தெட்சணை வைத்தார்கள். ஆனால், இந்தக்காணிக்கைகள், தெட்சணைகளாகிய கொடைகளெல்லாவற்றுள்ளும் தலை சிறந்தபரிசுபிதாவாகிய சர்வேசுரன் மனுக்குலத்துக்கு உவந்தளித்த கொடையேயாகும். இந்தப் பரிசுதான் என்ன ? தமது ஏகபேறான திருக்குமாரனை எமது இரட்சகராகத்தந்து அனுப்பினதே.

## தூதுசென்ற வானதூதன்

கடுங்குளிர்வீசிய—மக்களை நடுநடுங்கப்பண்ணிய அந்தஇராவிலே, பெத்லகேம்நகர் அயர்ந்து துயிலில்ஆழ்ந்திருந்த வேளையிலே, எளிய இடையர்கள் மாத்திரம் தங்கள்மந்தைகளைக் காவல் பண்ணுவதற்காக விண்ணில் மிளிர்ந்துகொண்டிருந்த நட்சத்திரக்குடையின்கீழ் நித்திரைவிழித்துக் காத்திருந்த போதினிலே, அர்த்தசாமநேரத்திலே இதோ வானுலகபிரபைவீசும் தேசோமயமான ஓர்தேவதூதன் அந்தஇடையர்கள்முன் தோன்றுகின்றார். அவர்கள்மத்தியிலே உலக இரட்சகர் ஓர் திருக்குழந்தையாகப் பிறந்திருக்கும் சுபசெய்தியை அவர்களுக்கு அறிவிக்கின்றார். அச்சணமே வானுலகசேனையின்கூட்டம் அந்தத்தேவதூதனோடு சேர்ந்து. "உந்நதஸ்தலங்களிலே சர்வேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும், பூலோகத்திலே நல்லமனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது" என்னும் மங்களகீதத்தைப் பாடி ஆர்ப்பரிக்கின்றது. மலைகள், பள்ளத்தாக்குகள்தன்னும் இந்த மங்கள வார்த்தைகளை ஏற்றுக்கொண்டன போல் எதிரொலிசெய்கின்றன. இந்தச் சந்தோஷசமாச்சாரம் இடையர்களிடையே காட்டுத்தீபோன்று பரவியதும் அவர்கள் தேவபாலகனைத் தரிசிப்பதற்காகக் காணிக்கைகளுடன் செல்லுகின்றார்கள்.

## முடப்பையனின் காணிக்கை

மாட்டுத்தொழுவத்திற்குச் சிறிது அப்பாலிருந்த ஒருவறியமுடப்பையனின் செவிகளிலும் இச் சுபசெய்தி தொனிக்கின்றது. அவனும் யேசுபாலகனைத் தரிசிக்க ஆவற்படுகின்றான். ஆனால், அங்குசெல்லவோ அவன் மனம் தயங்குகிறது. ஏனெனில், அத்திவ்வியகுழந்தைக்குக் காணிக்கை வைக்க அவனிடம்யாதொன்றுமில்லை. ஆனால், அத்திருக்குழந்தையைக்காண வேண்டும் ; அவரைவணங்கி நமஸ்கரிக்கவேண்டுமென்றஆவலோ அவனை விட்டபாடில்லை. இந்த ஆசையைப் பூர்த்திசெய்வதற்காக எவருமில்லாத சமயம்பார்த்துப் போகவேண்டுமென [...] . அவ்வாறு தருணம் [...] தொழுவத்தண்டை சென்று எட்டிப்பார்க்கிறான். தெய்வீக பிரபைவீசும் திவ்வியபாலகனின் திருவதனத்தைக் கண்குளிரக்காண்கிறான். வறியஇடையர்கள் சமர்ப்பித்த காணிக்கைகள் ஆங்காங்கே பரவிக்கிடப்பதையும் கண்டுகொள்ளுகிறான். அதனால் அத்திருக்குழந்தைக்கு ஏதோ ஒரு காணிக்கை செலுத்தியே தீரவேண்டுமெனச்சிந்தித்து, கடைசியாக ஒருதீர்மானத்திற்குவந்தவன்போல் அக்களிப்புமேலிட்டவனாய், திருக்குழந்தை முன்பாகச்சென்று " திவ்விய பாலகனே ! வறியமுடப்பையனாகிய நான் உமக்கு எதைக்காணிக்கையாகவைக்க முடியும்! ஓர்இடையனாயிருந்தால் ஒரு ஆட்டுக்குட்டியையாவது காணிக்கை வைப்பேனே ! வேறுநிலையிலிருந்தாலும் நான்வைக்கக்கூடிய காணிக்கையை வைக்கமறுப்பேனோ ? இருந்தும் இதோ ! என்னால் தரக்கூடியதை உமக்குத்தருகின்றேன். எனது இருதயத்தை உமக்குச்சொந்தமாக்கியருளும் " என்றுபாடுகிறான். இந்தமுடப்பையனின் பரிசைத் தேவபாலகனும் ஏற்றுக்கொண்டவர்போல அவன்பக்கமாகத் திரும்பி ஓர்புன்முறுவல் காண்பிக்கின்றார்.

தான் ஆசீர்வதிக்கப்பட்டவனென்று முடப்பையன் அப்போதே உணர்ந்துகொள்ளுகிறான். அவன் இப்போது ஒருமுடவனல்ல. நிமிர்ந்து நடக்கக்கூடியவனாகிவிட்டான். உதாரகுணத்தில் தோல்விபோகாதவராகிய திவ்விய பாலகன் அம்முடப்பையனின்பரிசைப் பெற்றுக்கொண்டு வாளாவிருப்பாரா ?

## யேசுபாலகனுக்கு எமது காணிக்கை

நத்தால்திருநாளைத் தற்காலம் கொண்டாடுகிற நாங்களும் எவ்விதபரிசுகளைத் தேவபாலகனுக்குச் சமர்ப்பிக்கமுடியும் ! செல்வந்தர்கள் ஒரு வறியகுடும்பத்தை அன்றுதினம் ஆதரித்து உதவிபுரிந்தால், அந்தக்குடும்பத்தினர் கொள்ளும்ஆனந்தம் யேசுபாலகன்கொள்ளும் ஆனந்தமேயாகும். "எனது இந்த எளியசகோதரர்க்குச் செய்தவை எனக்கே செய்தவைபோலாம்" என்பது எமதுஇரட்சகரின் மணிமொழியன்றோ !

பாலகதேவன் உண்மையிலே சமாதானத்தின் [...]ராசா அன்றோ ! அவர் வானுலக சம்மனசுகள்மூலம் தெரிவித்த முதற்செய்தி "நன்மனசுள்ளவர்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்பதே. நாமும் எமதுஇருதயத்தைத் தாழ்ச்சி, பிறர்சிநேகம்முதலிய புண்ணியங்களால் அலங்கரித்து அவருக்கு மனத்தாராளமாய் அர்ப்பணம்செய்வோம். அவரும் சமாதானம், பரிசுத்ததனம், சந்தோஷமாகிய தமதுநத்தால் பரிசுகளை எமக்குக் குறைவின்றி அருளுவார்என்பதில் சந்தேகமில்லை.

V. M. J.

---

## தொழுவமுங் கழுமரமும்

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மரியம்மாளிடத்தில் மாமிசஐக்கியமாகி மனுஷனானார்" என்றபின், "எங்களுக்காகப் போஞ்சியு பிலாத்திதுவின்கீழ் சிலுவையில் அறையப்பட்டு" என விசுவாசஉச்சாரணஞ் செய்வோம். பாலன் பிறப்புக் குடில். சிலுவையுடன்சார்ந்தால்தான் கருத்துப்பூரணம்அடையும். நத்தால்தினத்தில் நாம் அளவில்லா மகிழ்ச்சிகொள்ளக் காரணம்என்ன ? "கடவுள் உலகத்தை (மக்களை) எவ்வகையாய் நேசித்தாரெனில், தமதுஒரே பேறானகுமாரனை அளித்தார், அவரால் உலகம் உய்யும்பொருட்டு."

—M. ஜெயம்



## "உந்நதங்களில் சருவேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும் பூலோகத்தில் நல்மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக!"

பெத்லகேம்எனும் சிற்றூரில் தேவபாலன் பிறந்தபொழுது வானலோக சேனைகளாகிய சம்மனசுகளால்பாடப்பெற்ற உந்நதகீதம் இதுவாகும். (லூக். 2: 14.) திருச்சபையில் கொண்டாடப்படும் திருநாட்களுள் கிறிஸ்மஸ்எனப்படும் நத்தால் திருநாளைப்போன்று சந்தோஷமிக்கபெருநாள் வேறொன்றில்லை. நாலாயிரம் வருடங்களாகப் பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும், நானிலத்தோரும் ஆவலோடு காத்திருந்த உலகஇரட்சகர் பிறந்தசுபதினம்இது. மனுக்குல இரட்சணியத்திற்காகத் தேவசுதன் கன்னிசுத்த தேவஅன்னை மரியம்மாளின் நிர்மல உதரத்தில் அற்புதவிதமாய் உற்பவித்து, ஓர்திருப்பாலகனாய்உதித்த சுபமங்கள தினம்இது. ஆகவே, எமது இதயதடாகத்தின் அணைகளை உடைத்தெறிந்து கரைபுரண்டோடும்ஆனந்த பிரவாகம் நிறைந்த மனோகரமான ஓர்மகாபண்டிகை இது. அதனால், இதனைக் கிறீஸ்துவஉலகம் அத்துணை பெருங்குதூகலமாகக் கொண்டாடுவது ஆச்சரியமல்ல. வானதூதர்களே விண்ணுலகைவிட்டு மண்ணுலகில் இறங்கிவந்து ஞானானந்த மோட்சகானம்பாடிச் சாமக்காவல் செய்துகொண்டிருந்தஇடையர்களை ஆனந்த பரவசத்துக் குள்ளாக்கினார்களெனில் பின்னர் பேசவும்வேண்டுமா ? [...]லக யேசுவின்பிறப்பை ஞாபகமூட்டுவதாகிய கிறிஸ்மஸ் அல்லதுநத்தால் பெருநாளன்று உலகமடங்கலுமுள்ள கிறீஸ்துவர்கள்மத்தியில் ஒரேகுதூகலம்! ஒரேஆனந்தம்! சந்தோஷ கொண்டாட்டம்! ஆகவே, நாமும் ஞானானந்தம்பயக்கும் இந்தப்பெருவிழாவில் பங்குபற்றிப் பலன்பெற வருந்துவோமாக!

"கிறிஸ்மஸ்பப்பா" அன்று முன்னர் கூறியசம்மனசுகளின் உந்நதசெய்தியைக்கொண்டு உங்கள் இல்லங்களுக்கு வருவார். ஆனால், அவர்எல்லா இல்லங்களையும் தரிசிக்க நேரகாலம் இடந்தருமோஎன்பது சந்தேகம். அதனால், அவர் இயன்றவரை தரிசிக்கக்கூடிய இல்லங்களையெல்லாம் சென்று தரிசிப்பார். ஆனால், ஒருஎச்சரிக்கை! அதாவதுஅவர் "கிறிஸ்மஸ்பப்பா" வேடந்தாங்கி உங்களிடம்வருவது ஏதாவதுதண்டிப்போகவல்ல. ஆனால், யேசுபாலனின் இந்தக்கிறிஸ்மஸ் சுபநாளிலே உங்களை மகிழ்விக்க உங்கள் இல்லம் தேடிவரும் கிறிஸ்மஸ்பப்பாவுக்கு நல்வரவு கூறுங்கள். எவ்வளவு பயபக்தியாய்க்கொண்டாடக்கூடுமோ அவ்வளவுபயபக்தியாய்க் கிறிஸ்மஸ் விழாவை நீங்கள்கொண்டாடி அவரை ஆனந்தவெள்ளத்தில் மிதக்கச்செய்யுங்கள். உங்கள் இல்லங்களிலே நீங்கள் அலங்கரித்துத் தீபம்ஏற்றி வைத்திருக்கும் கிறிஸ்மஸ்குடில் அதிகம் கண்ணுக்குஅழகாயிருக்க அவர் காணும்போது, அவரும்ஒருகால் கையெடுத்துத் தேவபாலனைக் கும்பிட்டுவிட்டுத் திரும்பி உங்களைப் பார்க்கும்போது, அவரது பொக்குவாயில் ஒருபெரியபுன்னகை தவழுமானால் நீங்கள் கிறிஸ்மஸ்விழாவை நன்றாகக் கொண்டாடுகிறீர்களென்று சந்தோஷங்கொண்டு உங்களை ஆசீர்வதிப்பார்.

நிற்க, "கிறிஸ்மஸ்பப்பா" என்றால் யாரென்றுதெரியுமா? அவர்தான் அர்ச். நிக்கலஸ்— சந்நீக்கலார். பொரித்து மேசைமேல்வைத்த சேவலைச் செட்டையடித்துக் கூவச்செய்த பெரியஅற்புதவரத்தரான அர்ச்சியசிட்ட மேற்றிராணியார். சிறுபிள்ளைகளென்றால் அவருக்குஉயிர். ஓர் நத்தால்விழாக் கொண்டாட்டமன்று அவர்புதுமையாக அழகியசெந்நிற அங்கி தரித்தவராய், நரைதிரைவிழுந்த ஓர்விருத்தாப்பியராய் ஓர்பொட்டணத்தில் மிட்டாய்முதலாம் தின்பண்டங்களைக் கொண்டுவந்து யேசுபாலனின் திருநாமத்தினால் தமது நண்பர்களும், தோழர்களுமான சிறுபிள்ளைகளுக்குக் கொடுத்து அவர்களையெல்லாம் மகிழ்வித்து மறைந்துபோயினார். ஆனபடியாற்றான் கிறிஸ்மஸ்பப்பா கிறிஸ்மஸ்விழாதோறும் இவ்விதகோலத்துடன் காட்சியளித்து, மக்களை — விசேஷமாகப் பிள்ளைகளைச் சந்தோஷிப்பிக்க வருவார்என்பது அந்தநாள்முதல் இருந்துவரும் ஓர்எண்ணமாகும்.

உங்கள்இல்லங்களைத் தரிசிக்கவரும் "கிறிஸ்மஸ்பப்பா"வின் கண்ணோட்டம் முதன்முதல் சிறுபிள்ளைகளையே கவர்ந்துகொள்ளும். அவர்களெல்லாம் கிறிஸ்மஸ்விழாவன்று ஒருவர் தப்பாது தங்கள்பெற்றோருடன அழகானஉடைகள்தரித்து முந்தமுந்தக் கோவிலிலே கூடியிருக்கும்போது — திவ்வியபூசைமுடிந்து சின்னக்குழந்தையேசுவுக்குத் தங்களைக் காணிக்கையாகஒப்புக்கொடுத்துக்காணிக்கை செலுத்திவிட்டுத் திரும்பும்போது அவர்எல்லோரையும் கூர்ந்துகவனித்துக்கொண்டே நிற்பார். இவர்சிலவேளை உங்களைக் கோவில்வளவில் உபசரிப்பார். அதன்மேல் இல்லங்களுக்குப் புறப்படுவார். ஆகவே, அவருக்கு மரியாதைசெய்து, நீங்கள்எத்துணை பக்தியருட்சியாகக் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுகிறீர்கள்என்பதை அவருக்குச் சரிவரக்காட்டிவிடுங்கள் சுபம்.

"பொங்கும்மங்களம்
எங்கும்தங்குக"

சி. எஸ். நாயகம்
கிறிஸ்மஸ் பப்பாவின் அந்தரங்க காரியதரிசி,
பத்தாவத்தை, இளவாலை.

---

**அவருக்கு யேசு என்னும் நாமம். ஏனெனில், அவரே ஜனத்தைப் பாவங்களினின்று இரட்சிப்பார் — மத். 1, 21.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✝

திரு. நீ. ஞானப்பிரகாசம்
அவர்கள்
அமரபதமடைந்த
முதல்வருட
## மரண ஞாபகம்
(7-1-57)

தமது 47-வது வயதிலே எங்களைவிட்டு மறைந்தவரும், மேரி எலிசபேத் ஆகிய என் பத்தாவும், கிதபொன்கலன், வேதமணி, ஆன்மேரி, றெஜீனு இவர்களின் தந்தையுமான திரு. நீ. ஞானப்பிரகாசம் மரணமடைந்த முதல் வருடம 7-1-58-இல்பூர்த்தியாகிறபடியால் இதனைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாச, கன்னிகா ஞான சகோதரர், மற்றும் கிறீஸ்துவவிசுவாசிகள்யாவரையும் அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றோம்.

நேசபத்தாவை இழந்து துயருறும்
பாரியாரும், பிள்ளைகளும்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1391**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம் தற்காலம்கொழும்பு
1. ஏபிரகாம் அலோஷியஸ் செல்வநாயகமும்,
2. பெண் மேரி திரேசாவும் — வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரிறோட் 175/3
1. சின்னத்துரை பழனித்துரையும்,
2. பெண் மதியாபரணமும்,
3. பிறெடறிக் றோனல்ட் சந்தியாகுவும் — எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1391-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1958-ம்ஆண்டுதைமாதம் 28-ந்திகதிசெவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,800-உம், இன்னும் ரூபா 1,500-க்குப் 10-12-56 தொடக்கம், 21-3-57வரையும் 100-க்குப் 15%வட்டியும், அதன்பின் கூட்டுத்தொகைக்கு 5%வட்டியும், கோட்டுச் செலவு 200ரூபா 25சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கிறை குருந்தடி வளவும், நீலகுட்டி மடமும். நி. ப. 5½-யும், செய்பயிர், வான்பயிர்களும், கிணற்றுப்பங்கும், மற்றும் அதைச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — ஆறுமுகம் கனகரெத்தினத்தின் உரிமைக்காரருக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு — கே. மயில்வாகனம்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு — ஒழுங்கையும், கே. வல்லிபுரத்தின் ஆதனமும். தெற்கு — பொன்னையா பெண் தங்கரெத்தினத்தின் ஆதனம். இதில் சொரியலாய்ப் பன்னிரெண்டில் ஐந்துபங்கும், அதற்குரிய வைகளும்.

செ. இரத்தினசபாபதி,
24, சப்பெல்வீதி, கொம்மிஷனர்.
யாழ்ப்பாணம். 23-12-57

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான்பெற்றுக்கொண்ட இருபெரும் அனுக்கிரகங்களுக்காகப் பிறேக்நகரின் திருக்குழந்தையேசுவுக்குத் தாழ்மையாக நன்றிதெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஓர் அடியான்

# கிறிஸ்மஸ் தாத்தா யார்?

பொதுவாகச் சகல நாடுகளிலும் கிறிஸ்மஸ்காலம்வந்ததும் மிதமிஞ்சிய குதூகலமடைகிறவர்கள் குழந்தைகள் தான். விதம்விதமான இனிப்புவகைகள், பொம்மைகள், பந்துகள், புதிய உடைகள், மற்றும் விளையாட்டுச் சாமான்கள்பற்றிய எண்ணமே அவர்களின்உள்ளங்களில் நிறைந்திருக்கும். வெள்ளைவெளேரென்ற நீண்டதாடியுடனும், சிவப்பு-வெள்ளை ஆடையுடனும், முதுகில்பெரிய பையுடனும் முகத்தில் புன்னகைதவழ ஒருவர் அந்தஉள்ளங்களில் 'ஜம்'மென்று வீற்றிருப்பார். சும்மாவாஉட்கார்ந்திருப்பார்? இல்லை. அவர்களின்உள்ளங்களில் பலவர்ண வெளிச்சங்களை வீசிக்கொண்டிருப்பார். விநோதமான கற்பனைகளையெல்லாம் அள்ளிவீசுவார்.

தாத்தாவின்வெகுமதிகள் குழந்தைகளின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டிருக்கும். இந்தப்பிரகிருதிதான் கிறிஸ்மஸ்தாத்தாஎன்பதை நீங்களேஅறிவீர்கள். கிறிஸ்மஸ்தாத்தா என்றால் "அவர் பாலயேசுவைப்பார்ப்பதற்குத்தான்எங்கேயோஇருந்து வந்திருக்கிறார்" என்பது அவர்களின் நினைவு. பாலயேசுவுக்கு வெகுமதிகள் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, மறுபடியும் தமது ஊருக்குப் போகும்சமயம் தங்களுக்கும் வெகுமதிகளை வழங்கிவிட்டுச் செல்லும் ஒருநல்ல தாத்தாஎன்று அவரை நினைத்துக்கொள்வார்கள். அவரிடமிருந்து வெகுமதிகள்பெறுவதற்காக இராத்திரிவேளைகளில் தங்கள்காலுறைகளையும், வேறுபைகளையும் தங்கள்வீட்டுச் சன்னல்களுக்குவெளியே கட்டித் தூக்கிவிடுவார்கள். அப்படிச்செய்தால தாத்தா பாதிஇராத்திரியில் இரகசியமாகவந்து விளையாட்டுப் பொருள்களையும், சொக்லேற்பெட்டிகளையும் அவற்றுள்போட்டுவிட்டுப் போய்விடுவாராம்.



### தாத்தாவுக்குத் தபால்கள்

கிறிஸ்மஸ்காலத்தில் தபால்அதிகாரிகளுக்கு வேலைமிகவும் அதிகமாயிருக்கும். கிறிஸ்மஸ்வாழ்த்துக் காட்டுகளை விநியோகம்செய்வதற்கே அவர்களுக்குப் 'போதும்போதும்' என்றாகிவிடும். ஆனால், மேல்நாடுகளில் வாழ்த்துக் காட்டுகளின் தொகையை வென்றுவிடுமாம் கிறிஸ்மஸ் தாத்தாவுக்கு அனுப்பப்படும் கடிதங்களின்தொகை. அவ்வளவுதொகையான 'விசிறிகள்' தாத்தாவுக்கு.

இந்தக்கடிதங்களின் கதிஎன்னவாகும்? உண்மையாகவே 'கிறிஸ்மஸ் தாத்தா'என்று ஒருவரும் இருக்கமாட்டார்கள். இரண்டொருவர் பிரஸ்தாப பெயருடன் சிறுவர்கழகங்கள் முதலியவற்றைவைத்து நடத்துவார்கள். அவ்வளவுதான். இந்தக்கழகங்களுக்கு அனுப்பப்படும்கடிதங்கள் பத்திரமாகப் போய்ச் சேர்ந்துவிடும். ஆனால், பெரும்பான்மையான கடிதங்களில் எழுதப்பட்டிருக்கும் முகவரிகள் உண்மையானவைஅல்ல. கதைப்புத்தகங்களில் காணப்படும் உருவகக்கதைகளில் வரும் முகவரிகளாய்இருக்கும் அவை. எனவே, பிரஸ்தாப கடிதங்களையெல்லாம் அழித்துப்போடுவார்கள் என்றுதான் நினைப்பீர்களாக்கும். மேல்நாடுகளில் தபால்அதிகாரிகள் அவ்வளவு கல்நெஞ்சர்கள் அல்ல. அவர்கள் ஒவ்வொருகடிதத்தையும் திறந்துவாசிப்பார்கள். கிறிஸ்மஸ்தாத்தாவிடம் குழந்தைகள் கேட்டுஎழுதியிருக்கும் பொருள்களைவாங்கி அனுப்பாவிட்டாலும் இனிப்புவகைகளையாவது தங்கள்செலவில்வாங்கி அனுப்பிவிடுவார்கள்.

இங்கிலாந்தில் ஒருகுழந்தைஎழுதியிருந்தகடிதம் அவர்களுடையமனதை உருக்கிவிட்டது. "அன்புள்ள தாத்தா, எனக்கு ஒருபொம்மை தேவையாய் இருக்கிறது; என் அப்பா மோட்சம் போய்விட்டார்; பொம்மைவாங்கித்தர அம்மாவிடம் 'பென்னி' இல்லை" என்று அக்குழந்தை எழுதியிருந்தது. அந்தக் குழந்தையின் ஆசையைநிறைவேற்றத் தபால்அதிகாரிகள் பணஞ்சேகரித்தார்கள். தபால்அதிகாரிகளால் குழந்தைகளின் ஆசைகளைநிறைவேற்றமுடியாது போய்விட்டால், அவர்களின்கடிதங்களைத் தருமஸ்தாபனங்களுக்கும், மற்றும் சமூகசேவா சங்கங்களுக்கும் அனுப்புவார்கள், வேண்டியவற்றைச் செய்யும்படி.

சிலவருடங்களுக்குமுன் கிறீன்லாந்துக்கு அநேககடிதங்கள் கிறிஸ்மஸ் தாத்தாபேரில் போயின. சகலகடிதங்களும் அங்குள்ள 'டேனிஷ்' அரசாங்க காரியாலயத்துக்குத் தருவிக்கப்பட்டன. அங்கே ஒவ்வொருகடிதத்துக்கும் பதிலும், டென்மார்க்கைப்பற்றிய குறிப்புத் துண்டுப்பிரசுரங்களும், அழகான கதைப்புத்தகங்களும் வைத்து அனுப்பப்பட்டன. சிலநாடுகளில் குடும்பதலைவரே கிறிஸ்மஸ் தாத்தாவாக நடிப்பதுமுண்டு

### உண்மையான கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் தாத்தாவைப் பற்றியும், குழந்தைகள் அவர்மீது கொண்டிருக்கும் அபிமானத்தைப்பற்றியும் நாம் வாசிக்கும்போது, இவர் எப்படிக் குழந்தைகள்உலகத்துக்கு அறிமுகமானார்? இவருக்கு ஏன இப்படிப்பெயர் ஏற்பட்டது? இவருடையசரித்திரம் என்ன? என்று அறிந்துகொள்வது நல்லது.

கிறீஸ்துவுக்குப்பின் 270-ம்வருடத்தில் ஏஷியமைனர்என்ற சின்னஆசியாவில் பட்டாரா என்ற இடத்தில் தமது பெற்றோருக்கு ஓரேமகனாக ஒருவர்பிறந்தார். இவர் சிறுவயதினராக இருக்கும் போதே கொள்ளைநோயினால் பெற்றோர் இறந்துவிட்டார்கள். ஆனால், தமது திரண்ட ஆஸ்தியை இவர் அனுபவிக்கும்படி விட்டுவிட்டுத்தான் அவர்கள் மறுலோகம்சென்றார்கள்.

இவருடையபெயர் நிக்கலஸ்என்பதாகும். பெற்றோர்இறந்தபின் நிக்கலஸ் செய்தகாரியங்கள்தான் இவரை முதல் "சாந்தாக் ளோஸ்" ஆக்கியது. பெற்றோர்விட்டுச்சென்ற சொத்துகளை இவர் சுகிக்கவில்லை. பொருள்கள் எல்லாவற்றையும அனாதைப்பிள்ளைகள், ஏழைப்பிள்ளைகளுக்கு விநியோகஞ் செய்தார். அதனால் இவருடையபுகழ் ஆசியாவை விட ஐரோப்பாவில்தான் அதிகமாகப்பரம்பியது. இரவுநேரங்களில் இவர் ஏழைகளின்வீடுகளுக்கு இரகசியமாகச்சென்று பணமுடிப்புகளைச் சன்னல்வழியாகஉள்ளேபோட்டுவிட்டுத் திரும்பிவிடுவாராம். ஒருஏழையின் மூன்றுபெண்மக்கள் மணம்செய்வதற்குப் போதியவரதட்சணை இல்லாமல்தவிக்கும்போது நிக்கலஸ்அந்தரங்கமாகப் பணமுடிப்புகளை அந்தஏழையின்வீட்டுக்குள் போட்டு விவாகம் நடைபெற உதவியிருக்கிறார். ஆனால், அந்தஏழை தனக்குஉதவிசெய்தது நிக்கலஸ்தான்என்பதை எப்படியோகண்டுபிடித்துவிட்டான். இந்தச்செய்தி ஏஷியமைனர்முழுவதிலும காட்டாக்கினிபோலப் பரம்பியது. அத்துடன் கூடவே அவருடைய ஆஸ்திகளும் கரைந்துவிட்டன. அதன்மேல் நிக்கலஸ் மைராநகருக்குப் பிரயாணமானார்.

### மேற்றிராணியாரும் அர்ச்சியசிட்டரும்

இவர் எப்படிமேற்றிராணியாரானார் என்று அறிவது மிகவும்சுவாரஸ்யமாக இருக்கும். சிலமேற்றிராணிமார்களும், குருமார்களும் மைராநகரத்துக்கு ஒரு புதுமேற்றிராணியாரைத் தெரிவுசெய்வது எப்படிஎன்று யோசனைபண்ணிக் கடைசியாக, மறுநாள் மைராநகரத் தேவாலயத்துக்கு நிக்கலஸ்என்றபெயருடன்முதன்முதலாக யார்வருகிறாரோ அவரையே மேற்றிராணியாராக்குவது என்று முடிவுசெய்திருந்தார்கள். நமது நிக்கலஸுக்கே அந்த அதிர்ஷ்டம் கிடைத்தது.

நிக்கலஸ்மேற்றிராணியார் கொடையில் சிறந்திருந்ததுபோலத் தேவபக்தியிலும் சிறந்துவிளங்கினார். இவர் கி. பி. 341-ம்வருடம் பரலோகப்பிராப்தியானார். 1087-ல் இவருடையசடலத்தில் ஒருபகுதி இத்தாலிக்குக் கொண்டுபோகப்பட்டது. இரண்டாவது ஊர்பான் எனும்பாப்பானவர் இவருக்கு அர்ச்சியசிட்டபட்டம் அருளினார்.

### அர்ச். நிக்கலஸின் கோவில்கள்

உலாந்தபாஷையில் அர்ச். நிக்கலஸ் 'சிந்தாகிளேஸ்'என்று அழைக்கப்படுகிறார். இந்தப் பெயர்தான 'சாந்தாக்ளோஸ்'என்று திரிபட்டிருக்கவேண்டும். அர்ச். நிக்கலஸ்போரால் இப்பொழுது பிரான்சிலும், ஜேர்மனியிலும் 2,000 கோவில்கள் இருக்கின்றன. இங்கிலாந்தில் 400கோவில்களும், றோமையில் 60கோவில்களும், ஐஸ்லாந்தில் 440கோவில்களும் இவர்போரால் இருக்கின்றன. கத்தோலிக்கமக்கள் அர்ச். நிக்கலஸின் திருநாளை மார்கழி6-ந்திகதியன்று கொண்டாடுகிறா

---

## மரண அறிக்கை

பிறப்பு: 12—2—06 இறப்பு: 14—12—57

சில்லாலைப்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமதி அன்னம்மா கஸ்மீர் கடந்த 19 மாதங்களாகப் பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்டிருந்து கடைசித்தேவதிரவிய அநுமானங்களைக் குறைவறப்பெற்றுச் சென்ற 14-12-57 -இல் தமது 51-வது வயதில் பாக்கியமடைந்தா. இவ தமதுபிரியபத்தாவையும், பத்துப்பிள்ளைகளையும், மூன்று மருமக்களையும், ஒன்பதுபேரப்பிள்ளைகளையும் இவ்வுலகில் தவிக்கவிட்டுப்பிரிந்தா. இதைக்கண்ணுறும் நண்பர்களே இவவின் ஆத்துமசாந்திக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

சி. நீக்கிலாப்பிள்ளை
சில்லாலை

---

## இலவசம்

தமிழ்வைத்தியமும், அவுடத, திராவக, நீற்றுமுறைகளும் சிறந்தமுறையில் கற்றுக்கொடுக்கப்படும். விருப்பமுடையோர் தராதரப்பத்திரத்துடன் 28-12-57 வரை விண்ணப்பிக்கலாம்.

அதிபர்,
ஆயுள்வேத இலவசவைத்தியசாலை,
கோண்டாவில்

---

தாய்:— லில்லி, கிறிஸ்மஸுக்கு என்னென்ன உனக்குக் கொண்டுவர வேண்டுமென்று கிறிஸ்மஸ்தாத்தாவுக்கு நீ எழுதியிருக்கிறாய்?

லில்லி:— மம்மி, எனக்குவேண்டியதெல்லாம் ஒன்றுந்தப்பாதுகொண்டுவர வேண்டுமென்றுகேட்டு அவைகளையெல்லாம் குறித்துஎழுதி யிருக்கிறேன்.

தாய்:— எல்லாம் என்றால்!

லில்லி:— இரண்டு விளையாட்டுச் சாமான் சாய்ப்புகளும், ஒரு இனிப்புச் சாமான் சாய்ப்புந்தான்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS
No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catho
Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org